விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 30 புதன்கிழமை (13.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 145

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# முதல் நாள் நினைவுகூரல் முள்ளிவாய்க்காலில் ஆரம்பம்

## மே 18 வரை அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தில் முதல்நாள் நினைவுகூரல் நிகழ்வுகள் வடக்கின் சில இடங்களில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இறுதி யுத்தம் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் கப்பலடிப்பகுதி என்பவற்றில் இவ் நினைவேந்தல்கள் நினைவுகூரப்பட்டுள்ள நிலையில் வடக்கின் ஏனைய பாகங்களிலும் இவை தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)



## விடுதலையான மு.போராளி விபத்தில் சிக்கி உயிரிழப்பு

### 6 ஆண்டுகள் சிறை முடித்து வந்தவேளை சோகம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் சிக்கிய முன்னாள் போராளியொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு சுமார் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து விட்டு இம்மாதம் 8 ஆம் திகதி விடுதலையான நிலையிலேயே வீடுவந்து மூன்று நாட்களுக்குள் உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலைப்பாடு வேரவில் பூநகரியைச் சேர்ந்த மரியசீலன் ஜஸ்ரின் பீரிஸ் என்ற 31 வயதான முன்னாள் போராளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் 23ஆம் பக்கம் பார்க்க....

## மீண்டும் நிலநடுக்கம்

### நேபாளம் – 37 பேர் பலி, இந்தியா – 16 பேர் பலி



23ஆம் பக்கம் பார்க்க....

## 20-வது திருத்தம் இன்று பாராளுமன்றில்

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை அடங்கிய 20-வது திருத்தச்சட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகியுள்ளது.

20-ம் திருத்தச்சட்டம் குறித்து ஏதேனும் யோசனைகள், கருத்துக்கள் இருப்பின் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாக ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை–ரஷ்யா புதிய உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும், ரஷ்யாவும் புதிய உடன்பாடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரஷ்ய தூதுவருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே இத்தீர்மானம் எட்டப்பட் 24ஆம் பக்கம் பார்க்க....

## முள்ளிவாய்க்கால் நினைவு வாரம்; யாழ்.பல்கலையில் நேற்று அனுஷ்டிப்பு




(யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் இனப் படுகொலை முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் மே 12-18 நேற்று தொடக்கம் மாணவர்களால் மிக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைத்தே மேற்படி நினைவு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நடந்து முடிந்த இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் வைத்து கொல்லப்பட்டவர்களுடைய நினைவு வாரம் நேற்று முதல் உலகெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ 24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தாவின் மனு இன்று விசாரணைக்கு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தம்மை கைது செய்ய முயற்சிக்கப்படுவதாகவும், அதனை தடுத்து நிறுத்துமாறும் கோரி கோத்தபாய அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை இன்று உச்ச 24ஆம் பக்கம் பார்க்க....

## 65 இலங்கை அகதிகள் இன்று இந்தியாவிலிருந்து நாடுதிரும்புவர்

### மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தகவல்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியாவிற்கு அகதிகளாக சென்ற 65 இலங்கையர்கள் இன்று மீண்டும் நாடு திரும்புவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் தலையீட்டில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தின் அகதி முகாம்களில் பல வருடங்களாக வாழ்ந்து வந்தவர்களே இவ்வாறு இன்று நாடு திரும்பவுள்ளனர் என மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று தெரிவித்துள்ளார்.

இவர்கள் இரண்டு விமானங்களில் நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளதாக 24ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார அமைச்சரான என் மீதும் நெருக்கடிகள் பல பிரயோகிப்பு

### கடந்த ஆட்சி குறித்து மைத்திரி ஆதங்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கீழ் சுகாதார அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் தனக்கு எதிராக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை தொடர்பில் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார். அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் சுகாதார அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் ஏதேனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது எனகது அலரி மாளிகையில் இருந்து தொலைபேசி அழைப்பு 24ஆம் பக்கம் பார்க்க....

## வெடிபொருட்கள் மன்னாரில் மீட்பு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் விடுதலை புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் வெடி பொருட்கள் பல மன்னார் பாதுகாப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார், இல்லுபிட்டி பிரதேசத்தில் வைத்தே குறித்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 24ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உள்ளூராட்சி சபை மே-15இல் கலைப்பு

அனைத்து உள்ளூராட்சி சபைகளும் மே 15 ஆம் திகதி கலைக்கப்படவுள்ள நிலையில் இதற்கு முன்னர் விசேட ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் அவை கொண்டுவரப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இதேவேளை பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னரே உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## விசாரணைப் பிரிவுக்கு நிஸ்ஸங்க வருகை

எவன்காரட் நிறுவனத்தின் தலைவரும், ஓய்வுபெற்ற கேர்ணலுமான நிஸ்ஸங்க சேனாதிபதி கொழும்பு, கொள்ளுப்பிட்டிய நிதி மோசடி குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு வருகை தந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர் நேற்றைய தினம் குற்றத்தடுப்பு பிரிவிற்கு வருகை தந்துள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

நிஸ்ஸங்க சேனாதிபதி பல ஆவணங்களையும் எடுத்து வந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உயர் ரக வாகனமொன்றில் வருகை தந்த நிஸ்ஸங்க சேனாதிபதி பாதுகாப்புக்காக இரண்டு டிபெண்டர் வாகனங்களில் அவரது பரிவாரங்களும் அங்கு வந்திருந்ததாக கூறப்படுகின்றது. (செ-11)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் 19ஆம் திருத்தம் போல முறியடிப்போம்

## அஞ்சப் போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

பிரதமருக்கு எதிராக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக இதனை தெரிவித்துள்ளார்.

19-வது அரசியலமைப்பு திருத்த சட்டத்தை சிறுபான்மை அரசாங்கம் என்ற ரீதியில் நிறைவேற்றி காட்டியமை போன்று நம்பிக்கையில்லா பிரேரணையும் தோற்கடிப்போம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன்றை நடத்துவதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமாக இருந்தால் அதை அமுல்படுத்துவதே உரிய தீர்வு என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத பாரியளவிலான வேலைத்திட்டங்களை கடந்த 100 நாட்களில் தற்போதைய அரசாங்கம் செய்துள்ளது.

இவ்வேலைத்திட்டங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பங்களிப்பு அளப்பரியது.

இந்நிலையில் கடந்த காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், தற்போது அதே சூழலை தோற்றுவிக்க முனைந்து வருகின்றனர்.

அதுமாத்திரமல்லாது முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதியை பிரதமராக்கும் கனவு என்றுமே பலிக்காத பகல் கனவு.

இவ்வாறிருக்கும் போது பாராளுமன்றத்தை கலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியிலேயே பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்போவதாக எச்சரிக்கை விடுக்கின்றனர்.

பாராளுமன்றை கலைத்து உடனடியாக தேர்தலுக்கு செல்வதே முன்னாள் ஜனாதிபதியின் நோக்கமாக இருப்பின் அதை நிறைவேற்றலாம். அது குறித்து ஜனாதிபதியே தீர்மானத்தை எடடவேண்டும்.

நாம் அதற்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை.

பிரதமருக்கு எதிராக மாத்திரமல்லாது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

19-வது அரசியலமைப்பை எவ்வாறு வெற்றிகரமாக நிறைவேற்றினோமே அதைப் போலவே குறித்த நம்பிக்கையில்லா பிரேரணைகளையும் முறியடிப்போம் என ஊடகத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க பாகிஸ்தான் வழங்கிய உதவிக்கு நன்றி

## பாக். உயர்ஸ்தானிகரிடம் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பாகிஸ்தான் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் அனைத்து ஒத்துழைப்புக்களுக்கும் ஒட்டு மொத்த இலங்கையும் நன்றி பாராட்டுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் சயிட் சாகீல் ஹுசெய்ன் நேற்றைய தினம் ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானுக்கு நன்றி பாராட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போதும் இலங்கைக்கு பாகிஸ்தான் பாரியளவில் ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பாகிஸ்தானுக்கான பிரதிநிதி சொந்த நாட்டிற்காக போராடுவதனைப் போன்று இலங்கை விவகாரத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானில் காணப்படும் பௌத்த மத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் ஆய்வு செய்ய அகழ்வாராய்ச்சியாளர்களை அனுப்பி வைக்குமாறு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். (செ-11)

## பொதுச்சொத்து துஷ்பிரயோகம்-விமல்

தான் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சராக செயற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தை தற்போது மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண பயன்படுத்துவதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஒரு அமைச்சராக எவ்வித வாகனங்களையும் பயன்படுத்தவில்லை என தெரிவித்தாலும், இன்று குறித்த அமைச்சுக்கு சொந்தமான வாகனத்தை புத்திக பத்திரன பயனபடுத்தி வருகின்றார் என விமல் வீரவன்ச சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் பொது தேர்தலுக்காக இம் மாத இறுதியில் பாராளுமன்றத்தை கலைத்துவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே அதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட சிலரை பொது சொத்து சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING 2015**

***NOTICE OF MEETING***

Notice is hereby given that the **Annual General Meeting (AGM)** of the **Jaffna Medical Association** will be held on Friday, **12th June 2015 at 11.00 am at the Conference hall of Teaching Hospital, Jaffna,** for the following purposes;

1. To Receive and consider the Annual Report of the Committee of management on the affairs of the Company and the Statement of Accounts for the year ended 31st December 2014 and the Report of the Auditors thereon.
2. To approve the drafted new constitution.
3. To Consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
4. To Elect the Committee of Management for year 2015/16.
5. To Appoint the Auditors of the Association and to audthorize the Committee of Management to determine their remuneration.

By order of the Committee of Management ,

**Hony. Secretary.**

12th may 2015

A copy of the Audited Statement of Accounts for the year ended 31st December 2013 will be sent within two weeks.

(465)


# முஸ்லிம்களால் காடழிவதை தடுக்க அடுக்குமாடிகளை அமைக்க வேண்டும்

## பொது பல சேனா அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு அடுக்குமாடி கட்டிடங்களை அமைப்பதன் மூலமாக இலங்கையில் காடழிப்பை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டுமென பொது பல சேன வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் பிரதமநிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வில்பத்துவிற்கு அருகில் உள்ள பகுதிகளில் குறிப்பிட்ட மதத்தை சேர்ந்த மக்களை குடியமர்த்தியுள்ளதன் மூலமாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் இனவெறியை தூண்டுகிறார் என பொது பல சேனா குற்றம் சாட்டியுள்ளது.

வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சை மீண்டும் பெறுவதற்காவே அமைச்சர் சிறிசேனவுடன் இணைந்தார், அதன்மூலம் தனது இனவெறி நடவடிக்கைகளை தொடர்வதே அவரது நோக்கம், அவருககு வலுவான சக்தியொன்றின் ஆதரவுள்ளது, அந்த ஆதரவு இல்லாவிட்டால் அவர் தற்போதைக்கு கைது செய்யப்பட்டிருப்பார்.

அவர்களது இனத்தின் சனத்தொகை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக எங்கள் காடுகளை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அழிக்க முடியாது.

இதனை தடுப்பதற்காக அரசாங்கம முஸ்லம்களுக்கு அடுக்குமாடி கட்டிடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

ஒரு குடும்பத்திற்கு இரு பிள்ளைகள் மாத்திரமே என்ற கொள்கையை கடுமையாக அமுல்படுத்துவதன் மூலமே இலங்கையில் சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என டிலாந்த தெரிவித்தார். (செ-11)


**பெண் விற்பனையாளர் தேவை**

எமது நிறுவனத்துக்கு பிடவை அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.

**சிவகணேசன் பிடவையகம்**
**41, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

(470)

**தவறிவிட்டது**

பழைய மோட்டார் சைக்கிள் உடைய கறுப்பு கலர் battery பெட்டி மூடி பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள:-0778700600**

(கி-952)

**English for you**

O/L, A/L மற்றும் உயர்தரப் படிப்பினை தொடரும் அனைத்து மாணவர்களுக்குமான புதிய ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்.

தொடர்புகளுக்கு:- North Lead Education centre
ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்
0776169470

(469)


1ம் ஆண்டு

# நினைவஞ்சலி

பிறப்பு 09. 03. 1922



இறப்பு 24. 04. 2014

திதி: தசமி 13.05.2015

**அமரர் கந்தையா மாணிக்கலிங்கம்**
**(மண்டைதீவு)**

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தீர்
மக்கள் எமைப் பெற்று மகிழ்ந்தீர்
சிந்தையிலே அழியா நினைவெழுதி சென்றீர்
சிரபுரத்து மைந்தரே சிவன் கழலே சென்றீர்

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**
கந்தரோடை, சுன்னாகம்.

விஷ்ணு கோவில் வீதி,
மோதர.

(458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் குமாரசுவாமி நவரத்தினம்மா**

தோற்றம் : 09.04.1927
மறைவு : 24.04.2014

திதி : அபரபட்சதசமி
13.05.2015
புதன்கிழமை



நீங்காத நினைவில்
குமாரசுவாமி
வசந்தநாதன்

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல் வழி நடத்தி
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன்
என்றென்றும் வாழ்கின்றோம்.

பழமுதிர்ச்சோலை,
204 அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(459)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 197

## பொறாமையிலிருந்து விடுதலை

...அப்படியெனில் நீங்கள் இவற்றை அனுபவிப்பதில் ஏதேனும் குறை இருக்கிறதென்றா பொருள்? நீங்கள் வேறு எவரையும் விட குறைவாக அனுபவிக்கிறீர்களோ என்று எண்ணும் பொழுதுதான் உங்கள் மகிழ்ச்சி குறைய ஆரம்பிக்கிறது! வேறு எவரையும் விட குறைவாக அனுபவிக்கிறீர்களோ என்று எண்ணும் பொழுதுதான் உங்கள் மகிழ்ச்சி குறைய ஆரம்பிக்கிறது! வேறு யாரோ ஒருவர் உங்களை விட அதிகமாக அனுபவிக்கிறார்களோ என்ற எண்ணம் எழும் கணத்திலேயே, உங்கள் மொத்தச் சுவையும் மாறி விடுகிறது. நீங்கள் பொறாமையுடன் அமைதியற்றும் போய் விடுகிறீர்கள்.

பாருங்கள், வறுமையே நம்மைத் தொந்தரவு செய்வதில்லை. நாம் ஏழையாக இருக்கிறோம் என்ற எண்ணம்தான் நம்மைத் தொந்தரவு செய்கிறது. நாம் இருக்கும் நிலையிலேயே ஒரு அமைதியான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் நாம் ஏழையாக இருக்கிறோம் என்ற எண்ணம் நம்முள் நுழைந்தவுடன் நாம் துன்பமடைகிறோம். எவ்வாறு இந்த எண்ணம் வந்தது? மற்றவர்களைப் பார்த்து ஒப்பிட்டுக்கொள்வதால் நாம் இவ்வாறு உணர்வதற்குக் காரணம்,



இந்த எண்ணம் நேரடியாக நமது அஹங்காரத்தைத் தாக்கி நம்மை ஒரு மாவடுவைப்போலச் சுருங்கிப் போக வைப்பதால்தான்.

ஒரு சின்ன கதை.....

ஒரு தெருவில் இருபுறமும் எதிரெதிரே இரண்டு கடைகள், ஏறக்குறைய ஒரே மாதிரியான பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தன. எப்பொழுதும் அவர்களுடைக்கிடையே ஒரு கடுமையான போட்டி நிலவியது.

அவற்றில் ஒரு கடைக்காரர் ஒருநாள் வெளியே ஒரு விளம்பரப் பலகையை வைத்தார். 1929 ஆம் வருடம் நிறுவப்பட்டது. எதிர்ப்புறமுள்ள கடைக்காரர் இதைக் கடைக்குள்ளிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தார். அடுத்த நாள் அவர் ஒரு விளம்பரப் பலகையை அவரது கடையின் முன் வைத்தார். எல்லாம் புதிய பொருட்கள் பழைய சரக்குகள் ஏதுமில்லை.

(சிரிப்பு)

நீங்கள் உங்களை மற்றவருடன் ஒப்பிட்டுக்கொண்டு அதற்கு எதிர்வினையாற்றிக்கொண்டு இருந்தீர்களானால் உங்கள் மதிப்பை இன்னும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்று பொருள். நீங்கள் வெறுமனே உங்கள் மூளையிலிருந்து எதிர்ச்செயல் புரிகிறீர்கள்; அறிவிலிருந்து அல்ல. (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



## அதிசய உலகம்

### அதிசய முறையில் குழந்தையை பெற்றெடுத்த உலகின் முதல் பெண்!


கனடாவில் நற்ராசா றஜனி என்ற பெண் தனது கரு முட்டைகளை மறு நிரப்பல் செய்து அதன் மூலம் குழந்தை பெற்றெடுத்து அனைவரையும் வியக்க வைத்துள்ளார்.

இந்த சிகிச்சை மூலம் குழந்தை பெறும் உலகின் முதல் பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

ஏப்ரல் 13 ஆம் திகதி பிறந்த ஷாயின் என பெயரிடப்பட்ட இந்த குழந்தை மருத்துவ உலகை வியக்க வைத்துள்ளது.

இது ஒரு சிக்கலான கருவுறுதல் சிகிச்சை முறையாகும்.






குறைபாடான முட்டைகளை, பெண்ணின் சொந்த கருப்பையில் இருந்து எடுத்து புதிதாக உற்பத்தி செய்யும் உயிரணுக்களை பாவித்து மீள நிரப்பல் செய்யும் முறையாகும்.

இந்த செயல் முறை Toronto Centre for Advanced Reproductive Technology (TCART), மருத்துவ இயக்குநர் Dr. Robert Casper அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த முறையில் மேலும் எட்டு பிரசவங்கள் தொடர்ந்து இடம்பெற இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்.



## சமைப்போம் சுவைப்போம்

### பன்னீர் பஹடி



**தே.பொருட்கள்:**

பன்னீர் - 200 கிராம் (சதுரமாக வெட்டியது)
குடைமிளகாய் - 1 (நறுக்கியது)
வெங்காயம் - 1 (நறுக்கியது)
சோள மா - 1 டேபிள் ஸ்பூன்
பச்சை மிளகாய் - 4
பூண்டு - 4 பற்கள்
தயிர் - 2 டேபிள் ஸ்பூன்
உப்பு - தே.அளவு
மல்லித் தூள் - 1 டீஸ்பூன்
சீரகப் பொடி - 1 டீஸ்பூன்
மிளகுத் தூள் - 1/2 டீஸ்பூன்
மிளகாய் தூள் - 1/2 டீஸ்பூன்
எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

முதலில் மிக்ஸியில் மிளகாய், பூண்டு, மல்லித் தூள், சீரகப் பொடி, தயிர் மற்றும் உப்பு சேர்த்து கெட்டியாக அரைத்து, அதில் பாதியை தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மீதமுள்ள பாதியில் சோள மா, மிளகுத் தூள் மற்றும் மிளகாய் தூள் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.

பிறகு அதில் பன்னீர், குடைமிளகாய், வெங்காயம் சேர்த்து பிரட்டி, க்ரில் கம்பியில் வரிசைப்படுத்தி 20 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.

பின்பு அடுப்பில் மிதமான தீயில் க்ரில் கம்பியை நீட்டி பன்னீரை பொன்னிறமாக க்ரில் செய்து ஒரு தட்டில் வைக்க வேண்டும்.

அடுத்து ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தனியாக எடுத்து வைத்துள்ள பேஸ்ட்டை சேர்த்து சிறிது நேரம் நிறம் மாறும் வரை வதக்கி, பின் அதில் 2 டீஸ்பூன் சீரகப் பொடி மற்றும் மல்லித் தூள் சேர்த்து 3-4 நிமிடம் கிளறி விட்டு, பின் அதனை பன்னீரின் மேல் ஊற்றினால், பன்னீர் பஹடி ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 கோடி பெறுமதியான ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து கடத்தி வந்ததாகக் கூறப்படும் சுமார் 8 கிலோ 528 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மாரவில - தொடுவாவ பகுதியில் வைத்து இந்த ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 80 மில்லியன் (8 கோடி) என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## இலங்.தூதரகத்துக்கு சிறுசேதம் வெளிவிவகார அமைச்சு தகவல்

நேபாளம் மற்றும் இந்தியாவில் வடக்கு பிராந்தியங்களில் நேற்று நண்பகல் ஏற்பட்ட நிலஅதிர்வினால் நேபாளத்திலுள்ள இலங்கை தூதரகத்தின் கட்டடம் சிறு சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

எனினும், அங்குள்ள இலங்கை அதிகாரிகள் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 7.4 ரிக்டர் அளவில் இந்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளதுடன் நேபாளம் மற்றும் வட இந்தியாவில் கொல்கொத்தா, பீகார் உள்ளிட்ட சில மாநிலங்களில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது. (இ-5)

## ஆணின்சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஆண் ஒருவர் கடந்த வெள்ளியன்று உயிரிழந்துள்ள நிலையில் அவரது சடலத்தை யாரும் உரிமை கோராத நிலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ராஜா (வயது-55) என்பவரது சடலமே உரிமைகோரப்படாத நிலையில் உள்ளது. உரித்துடையோர் சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நாம் 13ஐ போன்று தோற்கடிப்போம்

## ஐ.தே.க.திட்டவட்டம்



(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.**

19ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தை சிறுபான்மை அரசாங்கம் என்ற ரீதியில் நிறைவேற்றி காட்டியமை போன்று நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் தோற்கடிப்போம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் ஒன்றை நடத்துவதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமாக இருந்தால் அதை அமுல்படுத்துவதே உரிய தீர்வு என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத பாரியளவிலான வேலைத்திட்டங்களை கடந்த 100 நாட்களில் தற்போதைய அரசாங்கம் செய்துள்ளது.

இவ்வேலைத்திட்டங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பங்களிப்பு அளப்பரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் கடந்த காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், தற்போது அதே சூழலை தோற்றுவிக்க முனைந்து வருகி ன்றனர்.

அதுமாத்திரமல்லாது முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதியை பிரதமராக்கும் கனவு என்றுமே பலிக்காத பகல் கனவு என அவர் தெரிவித்தார்.

இவ்வாறிருக்கும்போது பாராளுமன்றத்தை கலைப்பதற்கு மேற் கொள்ளப்படும் முயற்சியிலேயே பிரதமருக்கு எதிராக நம்பிக்கை யில்லா பிரேரணை கொண்டு வரப்போவதாக எச்சரிக்கை விடுக் கின்றனர்.

பாராளுமன்றை கலைத்து உடனடியாக தேர்தலுக்கு செல்வதே முன்னாள் ஜனாதிபதியின் நோக்க மாக இருப்பின் அதை நிறைவே ற்றலாம், அது குறித்து ஜனாதிபதியே தீர்மானத்தை எட்டவேண்டும். நாம் அதற்கு ஒருபோதும் அஞ்சப் போவ தில்லை.

பிரதமருக்கு எதிராக மாத்திரமல்லாது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

19ஆவது அரசியலமைப்பை எவ்வாறு வெற்றிகரமாக நிறைவேற்றினோமே அதைப்போலவே குறித்த நம்பிக்கையில்லா பிரேரணைகளையும் முறியடிப்போம் என ஊடகத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சிப்பாய் மீண்டும் விளக்கமறியலில்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூட்டத்தில் துப்பாக்கியுடன் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அங்குனு கொலபெலஸ்ஸ நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். கடந்த மாதம் 25ஆம் திகதி அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியில் ஜனாதிபதி பங்கேற்ற கூட்டத்தில் குறித்த இராணுவச் சிப்பாய் துப்பாக்கியுடன் சென்றுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வு பிரிவு இராணுவ சிப்பாயை 2ஆம் திகதி கைது செய்தது.

சந்தேகநபர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றுபவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இலங்கைக்கு வந்த இந்திய மீனவர்குழு இரு அமைச்சர்களைச் சந்தித்துப் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய மீனவர்கள் குழு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரை சந்தித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவை சந்தித்த இந்திய மீனவர்கள் தங்கள் பிரச்சினை தொடர்பான மனுவொன்றை அவரிடம் கையளித்தனர்.

பின்னர் மாலை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்து கலந்துரையாடினர்.

அப்போது தமிழக மீனவர்கள் குழுவினர் இலங்கை சிறையில் உள்ள 37 மீனவர்களையும் சிறை பிடிக்கப்பட்ட 25 படகுகளையும் விடுவிக்க வேண்டும், மீன்பிடி தடை காலம் முடிந்த பின் பாரம் பரிய கடல் பகுதியில் 3 ஆண்டுகள் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும், மேலும் இலங்கையில் தடை செய்யப பட்டுள்ள இழுவலைகளை பாரம பரிய கடல் பகுதியில் 3 ஆண்டுகள் பயன்படுத்த அனுமதிக்க வேண டும் என்று வலியுறுத்தினர்.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்து பேசி நடவடிக்கை எடுப்பதாக சுவாமிநாதன் உறுதியளித்தார்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீனவர் சங்க தலைவர் தேவதாஸ் தலைமையில் மீனவ சங்க பிரதிநிதிகள் சேசுராஜா, எமரிட், விஜயகுமார் உள்ளிட்டோர் கடந்த 2 நாட்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இராசி பலன்

13.05.2015

(சித்திரை 30, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

தசமி முன்னிரவு 8.30 மணிவரை

சதயம் காலை 6.22 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 4.43 மணிவரை

இராகுகாலம் 11.54-1.24 மணிவரை

சுபநேரம் 4.24-5.54 மணிவரை

வளவன்

**மேடம்:** வருமானம் அதிகரிக்கும நாள், எதிர்காலம் இனிமையாக அமைய புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், வருமானம திருப்தி தரும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** சொத்துக்களால் ஆதாயமுண்டு, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி:** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு, சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**மகரம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, தொழிலில் சிறு மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட வீதியினுடைய விபரம் வடக்கு மாகாண ஆளுநரிடம் அரச அதிபரால் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வயாவிளான் கிழக்குப் பகுதியில் உள்ள பொதுமக்கள் இலகுவான முறையில் போக்குவரத்து செய்வதற்கு தோலகட்டி பகுதியில் அமைந்துள்ள வீதியை பயன்படுத்த 27 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் எனக் கோரி வடமாகாண ஆளுநரிடம் மேற்படி வீதி விபரத்தை கையளித்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வயாவிளான் கிழக்கு ஜே/244, ஜே/245, கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் வயாவிளான் சந்திக்கு செல்வதற்கு சுற்றுப்பாதையைப் பயன்படுத்தி வந்தனர். இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி இருந்தனர். எனவே தமக்கு புதிய பாதை அமைத்துத் தருமாறு வடமாகாண ஆளுநர் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதன்படி ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய மீள் குடியேற்ற குழுவினருடன் கலந்துரையாடி புதிய வீதி அமைத்து தருமாறு இராணுவத்திடம் கோரிக்கை விடுத்திருந்தோம். அதற்கமைய இராணுவத்தினர் 1.8 கிலோ மீற்றர் நீளமுடைய புதிய பாதையை அமைக்கவிருந்தனர்.

அது தனியார் காணிகளுக்கு இடையில் செல்வதால் அந்தப் புதிய பாதையை அமைக்காமல் ஏற்கனவே தோலகட்டி பகுதியில் அமைந்திருந்த அச்சுவேலி வயாவிளான் வீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் 634 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதியை தருமாறு இராணுவத்தினரிடம் கோரியுள்ளோம்.

இந்த வீதியைப் பாவனைக்கு விடுவதாயின் இன்னும் 27 பரப்பு காணிகளை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும். அவ்வாறு விடுவித்தால் பொதுமக்கள் இலகுவாகப்பயணம் மேற்கொள்ளமுடியும். அத்தோடு சில குடும்பங்களையும் மீள் குடியேற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## எரிகாயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில்

(கரணவாய்)

குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த சனிசன் ஜெயனி (வயது 26) என்ற இளம் குடும்பப் பெண்ணே எரிகாயங்களுடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளான பெண் நான்கு மாதங்களுக்கு முன்னர் திருமணமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-60)

# பழமர நாற்றுக்களின் விற்பனையில் மோசடி

## விழிப்புடன் இருக்குமாறு பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் தரம் குறைந்த மற்றும் உறுதிப்படுத்தப்படாத பழமர நாற்றுக்கள் விவசாய திணைக்களத்தினூடாக விற்பனை செய்வதாக கூறி பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அவ்வகையான போலி நாற்றுக்களை குடாநாட்டு மக்கள் கொள்வனவு செய்ய வேண்டாம் என யாழ்.மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கீ.சிறிபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து அலங்காரத் தாவரங்கள், பழமரக்கன்றுகள் பரவலாகவிற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் அலங்காரத் தாவரங்கள் அலங்காரத்துக்கு மாத்திரம் பயன்படுத்துவதால் அதை மக்கள் நேரடியாக பார்த்து விரும்புகின்றவர்கள் கொள்வனவு செய்ய முடியும். ஆனால் மா, பலா போன்ற பல்லாண்டு பழமர தாவரங்களின் தரம் உறுதிப்படுத்தப்படவில்லை என்றால் அவர்கள் எதிர்பார்த்த பலனை பெறமுடியாது. பாரதூரமான பாரிய நட்டத்தை நீண்டகாலத்தில் விளைவிக் கக்கூடியது.

இவ்வகையான போலி நாற்றுக்களைவீடுவீடாகசென்று விவசாயத் திணைக்களத்தின் ஊடாக பதிவினை மேற்கொண்டு விநியோகிப்பதாக தவறான பிரசாரம் இனம் தெரியாத நபர்களால் விற்பனை செய்யப்படுகின்றது. எனவே பொதுமக்கள் விழிப் புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் இவ்வகையான பழமரக்கன்றுகளை ஏற்றி வரும் அரசாங்க இலச்சினை அற்ற வாகனங்களின் இலக்கங்களையும் அவர்களுடைய அடையாள அட்டை இலக்கங்களையும் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்கள் கிராம சேவையாளர் அல்லது விவசாய திணைக்களத்தில் அறிவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# சாவகச்சேரி பகுதியில் 11 வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சபை உறுப்பினர்களின் தெரிவில் 11 வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக சாவகச்சேரி நகர சபை தவிசாளர் இ. தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர சபையில் 2015 ஆம் ஆண்டுக்குரிய செயற்றிட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் வீதிப் புனரமைப்புக்காக 9.651 மில்லியன் ரூபா நிதி சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மாவடிப்புலம் வீதி, மில் வீதி, வீரபத்திரர் வீதி, வில்பத்து ஒழுங்கை, அடைப்பு வயல் ஒழுங்கை, காண்டைக்காடு வீதி, யாழ். வீதி, 4 ஆம் ஒழுங்கை, தண்ணீர்சல்மூட்டு வீதி, கச்சாய் வீதி, முதலாம் வடக்கு ஒழுங்கை, கென்ஸ்மன் வீதி, வடக்கு ஒழுங்கை முதலியார் வெளிவீதி ஆகிய 11 வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இராணுவம் நடத்திவரும் உல்லாச விடுதியை வடமாகாணசபையிடம் கையளிக்க வேண்டும்

## சுற்றாடல் அமைச்சர் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென இராணுவம் உல்லாச விடுதியொன்றை நடத்தி வருகிறது. இராணுவம் இதனை வட்க்கு மாகாண சுற்றுலாத்துறையிடம் கையளிக்க வேண்டும் என்று வடகத மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக வலசைப் பறவைகள் தினத்தைக் கொண்டாடும் முகமாக வடமாகாண சுற்றாடல் அமைச்சு மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து மாணவர்களுக்கான கருத்தமர்வு மற்றும் வெளிக்களப் பயிற்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்ச்சிகளின் இறுதி அமர்வாக மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்த பின்னர் வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி வடக்குக்கு அதிக வருவாயை ஈட்டித் தரத்தக்க துறையாக சுற்றுலாவை நாம் வளர்த் தெடுக்க வேண்டும். அதே சமயம், சுற்றுலாவால் எமது பண்பாடும் சுற்றுச்சூழலும் பாதிக்காதிருப்பதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். இதற்கு, வடக்கின்சுற்றுலாவை




இயற்கை சார்ந்த சூழலியற் சுற்றுலாவாக ஊக்குவிப்பதே பொருத்தமானது.

தமிழ்நாட்டில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் உலக அளவில் பெயர் பெற்றது. ஐரோப்பிய நாடுகளில் குளிர்உறைக்கத் தொடங்கும் போது அங்கிருந்து இடம்பெயர்ந்து செல்லும் பறவைகள் கூடுகின்ற இடங்களில் இதுவும் ஒன்று. இந்த வலசைப்பறவைகளைக் கண்டுகளிப்பதற்கென்று ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் பறவை ஆய்வாளர்களும் இங்கு வந்து செல்வார்கள்.

வேடந்தாங்கல் போன்று தான் எமது சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமும் வலசைப்பறவைகளுக்கு மிகவும் உவப்பான ஒருசூழல். இது தென் இலங்கையின் குமண பறவைகள் சரணாலயத்துக்கு அடுத்த படியாக பிரசித்தமானது. பூநாரை உட்பட்ட அரிய பல பறவை இனங்களை இங்கு நான் பார்த்திருக்கிறேன். போர் காரணமாக கண்டுகொள்ளாமல் விடப்பட்ட இந்தப் பறவைகள் சரணாலயத்தை நாம் வடக்கின் முக்கிய சுற்றுலா மையங்களில் ஒன்றாக விருத்தி செய்ய வேண்டும்.

ஆனால், போருக்குப்பின்னர் எல்லாத்துறைகளிலும் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்த விரும்பிய படைத்தரப்பு சுற்றுலாத்துறையையும் விட்டு வைக்க விரும்பவில்லை. வலி.வடக்கில் பொதுமக்களின் நிலங்களை அபகரித்து வைத்திருக்கும் இராணுவம் அங்கு சுற்றுலாப் பயணிகளுக கென்று தலசெவன என்ற உல்லாச விடுதியை உருவாக்கி வைத்திருக்கிறது.

அதேபோன்று, சுண்டிக்குளம பறவைகள் சரணாலயப் பகுதியில் நேச்சர் றிசோட் எனற உல்லாச விடுதியை உருவாக்கி வைத்திருக்கிறது. வடக்கின் பொருளாதாரத்தை தமதாக்க முனையும் இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. இராணுவம் இவற்றை வடக்கு மாகாண சபையின் சுற்று லாப்பிரிவிடம் கையளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில்வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா, மாகாணசபை உறுப் பினர் பா.கஜதீபன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண வவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ் பல்கலைக்கழக விலங்கியற்றுறை விரிவுரையாளர் க.கஜபதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணில், ரவி, ஜோனுக்கு எதிராக பிரேரணையைக் கொண்டுவந்து பாராளுமன்றைக் கலைப்போம்

## எம்.பி.சரத்குமார எச்சரிக்கை

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்து பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.**



புண்ணியத்தினால் பிரதமராகி 40 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்து ரணில் விக்கிரமசிங்க நடத்தும் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பவென மகிந்த ராஜபக்ஷ ஆதரவுக் குழுவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நீர்கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்தவுடன் மீண்டும் மீண்டெழுவோம் என்ற கோஷத்திற்கு நாடுமுழுவதும் வரவேற்பு காணப்படுகின்றது. அதனால்அதனை அனைவரும் ஏற்க வேண்டும்.

இந்நிலையில் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, ரவி கருணா நாயக்க ஆகியோர் மீது தற்போது நமபிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்துள்ளோம். அந்த வகையில் விரைவில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவோம்.

இவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதன் மூலம் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு அழுத் தம் கொடுக்கவுள்ளோம்.

புண்ணியத்தினாலேயே ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியுள்ளார்.

40 பேர் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்து நடத்தும் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பவென மகிந்த ராஜபக்ஷ ஆதரவுக் குழுவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மும்பை மருத்துவக் கண்காட்சியில் யாழிலிருந்தும் மூவர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆங்கில மரு ந்து வர்த்தக சங்க உறுப்பினர்கள் மூவர் இந்தியாவின் மும்பை நகரில் நடைபெறவு ள்ள சர்வதேச மருத்துவக் கண்காட்சியில் பங்குபற்றுவ தற்காக நேற்று சென்றுள்ளனர்.

இன்று புதன்கிழமை முதல் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த மருத்துவக் கண் காட்சியில் 200 நாடுகளுக்கு மேற்பட்ட 600 வர்த்தகப் பிரமு கர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.மருந்து வர்த்தக சங்க உறு ப்பினர்களான லயன் எம். தவக்குமாரன், டாக்டர் கே. எம்.பத்மநாதன் மற்றும் ரி.சிறி கரன் ஆகியோரே மேற்படி கண் காட்சிக்குச் சென்றுள் ளனர்.

இதேவேளை மேற்படி கண் காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது. (இ-3)



ஜெய் குருதேவ்

உங்களை உணருங்கள் அன்பில் மலருங்கள்

THE ART OF LIVING

வாழும்கலை நிறுவுனர்
பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின்
59வது பிறந்ததின விழா
(13.05.2015) இன்று புதன்கிழமை

பிரதம விருந்தினர்

திரு.இ.இளங்கோவன் (ஆளுநரின் செயலாளர்,
ஆளுநர் செயலகம் - வடமாகாணம்
இடம் : நல்லூர் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதி வளாகம்
(இலங்கை வங்கி முன்பாக) நேரம் : பி.ப 5.00 மணி

நிகழ்வுகள்

குரு பூஜை, சத்சங்கம், கலைநிகழ்வுகள், குருஜியின் வீடியோ காட்சிகள், தியானம், பரிசளிப்பு
குடும்பத்தோடு பங்கு கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-957) அனைவரும் வருக! ஆனந்தம் பெறுக!

வாழும்கலை நிலையம் - இல.254, பிறவுண வீதி, யாழ்ப்பாணம

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### அப்புக்குட்டி கந்தசாமி
### (அகில இலங்கை சமாதான நீதவான்)

சுதுமலை தெற்கைப்பிறப்பிடமாகவும், அச்சுவேலி கதிரிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி கந்தசாமி அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற ஆணையாளர் திருமதி K.சிவபாதசுந்தரம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினரும், ஓய்வு நிலை இ.போ.ச. நடத்துநரும், சுதுமலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யுவசக்தி சனசமூக நிலையம், கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையம், ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினருமாவார். பிரபல சமூக சேவையாளருமான இவரை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சுதுமலை தெற்கு நண்பர்களும்
கதிரிப்பாய் முரசொலி வாழ் மக்களும்

(462)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 14 செவ் 4 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர் இந்தியா
தொ.இ: B/4479

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 32 செவ் 8 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: A/L / தனியார் தொழில்
தொ.இ: B/4480

பிறப்பு: 1984 RC
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/4481

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 40 செவ் 4 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4483

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 64 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: பட்டதாரி அரச தொழில்
தொ.இ: G/1151

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 23
உயரம்: 5’
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1152

பிறப்பு: 1984 RC
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: பொறியியல் தனியார்
தொ.இ: G/1192

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 3 செவ் 2 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/1194

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா தீர்ப்பின் முக்கிய விபரங்கள்


சொத்துக்குவிப்பு மேன்முறை யீட்டு வழக்கில் அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை "நிரபராதி" என விடுதலை செய்வதற்கான காரணங்களை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி. ஆர்.குமாரசாமி தனது 919 பக்க தீர்ப்பில் விபரித்துள்ளார்.

அதில் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் டி"குன்ஹா ஏற்க மறுத்த ஆதாரங்களாக பலவற்றை சுட்டிக் காட்டியுள்ளார்.

குன்ஹா கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதி 1136 பக்க தீர்ப்பை அறிவித்தார். அதில் 1.7.1991 முதல் 1.4. 1996 வரை ஜெயலலிதாவின் செலவீனம் ரூ.8,49,06,833. இதே காலகட்டத்தில் வருமானம் ரூ.9,91,05,094. தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்த பலவற்றின் மதிப்பில் 20 சதவீதம் கழிவு வழங்கப்பட்டு 1.4.1996 அன்று ஜெய லலிதாவின் சொத்துமதிப்பு ரூ.55, 02,48,215 ஆக இருந்தது.

பொது ஊழியர்ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்குவித்தது, நால்வரும் கூட்டுச்சதி செய்தது, பினாமியாக செயற்பட்டது உள்ளிட்ட குற்றங்களுக்காக நால்வரும் தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், அபராதமும் விதித்து, சொத்துகளை பறிமுதல் செய்யவும் உத்தரவிடுகிறேன் என குன்ஹா தீர்ப்பில் எழுதினார்.

ஆனால் சொத்துக்குவிப்பு வழக்கின் மேன் முறையீட்டை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி. ஆர்.குமாரசாமி குன்ஹாவின் தீர்ப்பை முற்றிலுமாக நிராகரித்துள்ளார். தனது 919 பக்க தீர்ப்பில் குன்ஹாவின் தண்டனை, அபராதம், பறிமுதல் உள்ளிட்ட அனை



த்து அம்சங்களையும் நிராகரித்துள்ளார்.


ஜெயலலிதா மீது வழக்கு தொடுத்துள்ள தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை கணக்குப்படி 1991-96 கால கட்டத்தில் வருமானத்துக்கு அதிகமான சொத்துமதிப்பு ரூ.66, 65,20,396.ஆனால் நீதிபதி குன்ஹா கணக்கீட்டின்படி அவரது சொத்து மதிப்பு ரூ. 53,60,49,954. இந்த மதிப்பில் பொது ஊழியரான ஜெயலலிதாவின் தனிப்பட்ட சொத்து மதிப்பு தனியாக கணக்கிடாமல் நால்வரின் மொத்த மதிப்பாக கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் அரசு தரப்பு கட்டடங்களின் மதிப்பு, சுதாகரனின் திருமண செலவு, தனியார் நிறுவனங்களின் சொத்துகள் ஆகியவற்றை ஒன்றாக கருத்தில் கொண்டுள்ளது. அதனை நீதிபதி குன்ஹாவும் பரிசீலித்து முடிவுக்கு வந்துள்ளார். ஆனால் ஜெயலலிதா தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அவரிடம் ரூ.2,82,36,812 மதிப்புள்ள சொத்துகள் இருந்ததற்கான ஆதாரங்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன. அதனை கர்நாடக உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

இதேபோல குற்றம் சாட்டப்பட்டவரின் சொத்துகள்,




தனியார் நிறுவனங்கள், பிற சொத்துகள், கட்டுமான மதிப்பு ஆகியவற்றை சேர்த்து ரூ.27,79,88,945 என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சுதாகரனின் திருமண செலவு ரூ.6,45,04,222 தொகையும் சேர்த்து ஜெயலலிதாவின் மொத்த சொத்துமதிப்பு ரூ.66,44,73,573 என்று



அரசு தரப்பு காட்டியுள்ளது.

இதில் உரிய ஆதாரங்கள் இல்லாமல் மிகைப்படுத்தி கணக்கிடப்பட்ட கட்டுமான மதிப்புத் தொகையையும் திருமண செலவு தொகையையும் நீக்கிவிட்டால், குற்றம்சாட்டப்பட்டவர்களின் சொத்து மதிப்பு ரூ.37, 59, 02,466 ஆக உள்ளது.

இதேபோல ஜெயலலிதா தரப்பின் சொத்துகள், நிறு



வனங்கள் மற்றும் பிற வருவாய் 34,76,65,654 ரூபாயாக உள்ளது. இதில் வருமான வரி முறையாக செலுத்தப்பட்டதை நீக்கிவிட்டு கணக்கிட்டால், வருமானத்துக்கு அதிகமாக குவித்த சொத்துமதிப்பு ரூ.2, 82, 36,812 ஆகும். எனவே வருமானத்துக்கு அதிகமாக பொது ஊழியரான ஜெயலலிதா சேர்த்த சொத்துகளின் விகிதாசாரம் 8.12% ஆகும். இது அவரது வருமானத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிய தொகை.

கிருஷ்ணானந்த் அக்னிஹோத்ரி மீதான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 'வருமானத்துக்கு அதிகமாக 10% வரை அதிக சொத்துகள் வைத்திருக்கும் நபர்கள் விடுதலை செய்ய உரிமையுடையவர்கள் என தீர்ப்பளித்துள்ளது. இதேபோல ஆந்திர அரசு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில் பொது ஊழியர் வருமானத்துக்கு அதிகமாக 20% வரை சொத்துகள் வைத்திருப்பது அனுமதிக்கக் கூடியதே என தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இவ்வழக்கில் வருமா னத்துக்கு அதிகமாக 10வீதத்திற்கும் குறைவாக சொத்து வைத துள்ள ஜெயலலிதா, உச்ச நீதிமன்றம் அனுமதிக்கப்பட்ட வரையறைக் குட்பட்டவர். எனவே ஜெயலலிதா குற்றமற்றவர் என்பதால் அவரை இந்த நீதிமன்றம் விடுதலைக்கு உரியவராக கருதுகிறது. குற்றம் சாட்டப்பட்டோர் பட்டியலில் முதன்மையானவராக இடம் பெற்றிருக்கும் ஜெய லலிதாவே குற்றமற்றவர் என்பதால் மற்ற மூவரையும் விடுதலைக்கு உரியவர்களாக கர்நாடக உயர் நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இதேபோல ஜெயலலிதா தரப்பு அபிராமபுரம் இந்தியன் வங்கியில் பெற்ற கடனை, கீழ் நீதிமன்றம் வருமானமாக கருதவில்லை. அந்தப் பிழையை கீழ் நீதிமன்றம் செய்யாமல் இருந்திருந்தால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகளாக கருத வேண்டிய நிலை கீழ் நீதிமன்றத்துக்கு ஏற்பட்டு இருக்காது எனகுமாரசாமிதனது தீர்ப்பில் கூறியுள்ளார். (இ)


# கோயிலுக்குச்சென்று திரும்பியதும் தீர்ப்பு எழுதினார் நீதிபதி குமாரசாமி

(சென்னை)

குமாரசாமியின் பூர்வீகம் கர்நாடக மாநிலம் பெல்லாரி என்றாலும், பிறந்து வளர்ந்தது பெங்களூரில்தான். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த குமாரசாமி அரசு பாடசாலையில் படித்து, கல்லூரி கல்வியை ஆரம்பித்தார். தனது தந்தையின் ஆசையின்படி பெங்களூர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டப் படிப்பில் பட்டம் பெற்றார். 12 ஆண்டுகள் சட்டத்தரணியாக வலம்வந்த குமாரசாமி 1995இல் பெங்களூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியாக பொறுப்பேற்று சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரித்தார். குடும்ப நல நீதிமன்றம், லோக் ஆயுக்த நீதிமன்றம் ஆகியவற்றில் 10 ஆண்டுகள் பணியாற்றிய பின், 2005இல் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதி யாகவும், 2007இல் நிரந்தர நீதிபதியாகவும் பதவியேற்றார்.

**முல்பாகலில் முடிவு**

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல்.தத்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் பணியாற்றிய போது அவருடன் நெருங்கிப் பழகியுள்ளார். இருவரும் நெருக்கமான நண்பர்கள் என்பதால் விடுமுறை காலங்களில் சிருங்கேரி கோயிலுக்கும், முல்பாகல் சிக்கு திருப்பதி கோயிலுக்கும் சென்று பூஜை செய்து வருவார்கள். ஜெயலலிதா வழக்கில் தீர்ப்புக்கு இறுதி வடிவம் கொடுத்துவிட்டு மே 3ஆம் திகதி தனியாக சிக்கு திருப்பதி கோயிலுக்கு சென்று பிரம்மமுகூர்த்த பூஜை செய்துள்ளார் குமாரசாமி. அநேகமாக அங்கு சென்று வந்த பிறகுதான் தீர்ப்பின் முடிவை தீர்மானித்திருக்கிறார். இதனை



குமாரசாமியுடன் பணியாற்றும் நீதிமன்ற ஊழியர்கள் உறுதியாக சொல்கிறார்கள்.

**கடைசி நிமிடத்தில்..**

கடந்த 2 மாதங்களாக தினமும் காலை 9.30 மணிக்கு நீதிமன்றத்துக்குள் நுழையும் அவரது கார் மாலை 6.50 மணிக்கு தான் வீட்டுக்கு புறப்படும். அதுவரை சேம்பரில் இருந்து இயற்கை உபாதைகளை தவிர எதற்கும் எழுந்து போகாமல் தீர்ப்பெழுதியுள்ளார். இந்த பணிக்காக தான் தேர்ந்தெடுத்த 7 பேர்களில் நம்பிக்கையான 3 பேரிடம் முக்கிய பக்கங்களை தட்டச்சு செய்ய கொடுத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் தீர்ப்பெழுதும் பணி நடந்தது. நீதிபதியின் தனி வழி காட்டுதலின்படி நீதிமன்ற உதவி அதிகாரி லாவண்யா தீர்ப்பு ஆணையை பிரதி எடுக்கும் பணியில் ஈடுபட்டார். குறிப்பாக தீர்ப்பின் கடைசி இரண்டு பக்காங் களை (ஆப்ரேட்டிவ் போர்ஷன்) நேற்று முன் தினம் காலை 7.30 மணிக்கு வந்து தயாரித்துள்ளார். ஏனென்றால் தீர்ப்பின் முடிவு வெளியே கசிந்து விடக்கூடாது என்பதற்காகவே குமாரசாமி இவ்வாறு செய்துள்ளார்.

**அதிரடி தீர்ப்புகள்**

ஆயிரம் வழக்குகளுக்கு மேல் விசாரித்துள்ள அவர் அதில் சரிபாதி வழக்குகளில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செயதுள்ளார். ஆனால் பெரிய வழக்குகளிலும், பிரபல வழக்குகளிலும் விசாரணை நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான தீர்ப்பையே வழங்கியுள்ளார்.

இதற்கு உதாரணமாக முத்திரைத்தாள் மோசடி மன்னன் கரீம் தெல்கி, சர்ச்சைகுரிய சாமியார் நித்யானந்தா, பி.டி. பருத்தி போன்ற வழக்குகளை கூறலாம். அதேபோல நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய கம்பாளப்பள்ளி கிராமத்தில் 7 தலித்துகள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் 'தலித் படுகொலைக்கு போதிய ஆதார்ங்கள் "இல்லை" எனக்கூறி அனைவரையும் விடுதலை செய்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் ஓய்வு பெறுகிற குமாரசாமி மீது இதுவரை பெரிய அளவிலான குற்றச்சாட்டுகள் இல்லை. இருப்பினும் தவறான ஆவணங்களை தாக்கல் செய்து இரு வீடுகள் பெற்றதாக புகார் எழுந்தது. அப்போது இவருடன் சர்ச்சையில் இடம்பிடித்த எச்.எல். தத்து, குமாரசாமிக்கு ஆதரவாக செயற்பட்டு பிரச்சினையை தீர்த்து வைத்தார்.

பெரிதும் பேசப்படும் தீர்ப்பை வழங்கிய குமாரசாமியை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதிகளும், பதிவாளர்களும் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். ஆனால் தலைமை நீதிபதி வகேலாவும், ஊழல் தடுப்புத்துறை பதிவாளரும், குன்ஹாவும் சந்திக்கவே இல்லை. தனது தீர்ப்பால் இவர்கள் அதிருப்தி அடைந்திருக்கலாம் என குமாரசாமி தனது உதவியாளர் கனகராஜிடம் தெரிவித்திருக்கிறார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ/பூவரசு ஆரம்ப பாடசாலைக்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தனின் 2014ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து போட்டோ கொப்பி இயந்திரம் பாடசாலை அதிபர் இரவிச்சந்திரனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:-குருமன்காடு செய்தியாளர்)

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை

## முல்லை.இ.போ.ச.முகாமையாளர் ஆதங்கம்

(முள்ளியவளை)

இலங்கைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நாடளாவிய ரீதியாக தனியார் போக்குவரத்து சேவையினரின் பேருந்துக்கள் 60 விகிதமும் இ.போ.ச. பேருந்துக்கள் 40 விகிதமும் என்னும் அடிப்படையில் வழித்தடங்கல்களில் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படாமையினால் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தூர இடங்களுக்கான தமது சேவையினை மக்களுக்கு முழுமையாக வழங்க முடியவில்லை என முல்லைத்தீவு இ.போ.ச.சாலை முகாமையாளர் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். அத்துடன் தமது சாலையில் போதியளவு பேருந்துகளும் ஆளணியும் உள்ளபோதும் உயர் அதிகாரிகள் இதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தயக்கம் காட்டுவது ஏன் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தீர்மானத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான வழிவகைகளை செய்து உதவவேண்டுமென சாலை முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-302)

# பெய்துவரும் மழையினால் தற்காலிக வீடுகளில் வசிக்கும் குடும்பங்கள் அவதி

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில் கடந்த சில நாட்களாக நண்பகலுக்கு பின்னர் பெய்து வரும் மழை காரணமாக தற்காலிக வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பின்னர், ஒரு வருடத்துக்கு பயன்படக் கூடிய அளவில் பல குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அந்த வீடுகளிலேயே மக்கள் இதுவரையிலும் வாழ்கின்றனர். தற்போது பெய்யும் மழையால் அந்த வீடுகளில் வசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்திய வீட்டுத் திட்டம், புள்ளித் திட்ட அடிப்படையில் வழங்கப்பட்டமையால், 2, 3 அங்கத்தவர்களைக் கொண்ட வறிய குடும்பங்கள் இந்த வீடுகளைப் பெறவில்லை.

இதனால் அந்தக் குடும்பங்கள் தற்காலிக கொட்டகைகளில் மிகவும் அவதியுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. (2)

# மாத்தளன், குமுழமுனை பஸ் சேவைகள் ஆரம்பம்

(முள்ளியவளை)

மாத்தளன், குமுழமுனை ஆகிய இரு இடங்களுக்கான இ.போ.ச. பேருந்து சேவையானது நீண்டகால இடைவெளியின் பின்னர் கடந்த 10ஆம் திகதி தொடக்கம் மீண்டும் பேருந்து சேவைகளை ஆரம்பித்துள்ளன.

மாத்தளனுக்கான பேருந்து சேவையானது முல்லைத்தீவிலிருந்து மாலை 6மணிக்கு புறப்பட்டு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை ஊடாக மாத்தளனைச் சென்றடையும்.

மாத்தளனிலிருந்து காலை 6.45 மணிக்கு மீண்டும் புறப்பட்டு இரணைப்பாலை புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத்தீவை சென்றடையும்.

இதேவேளை குமுழமுனைக்கு தினமும் இரண்டு பேருந்து சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இதில் முதலாவது பேருந்து சேவையானது முல்லைத்தீவிலிருந்து காலை 7மணிக்கு புறப்பட்டு, முள்ளியவளை தண்ணீரூற்று ஊடாக குமுழமுனையைச் சென்றடைந்து அங்கிருந்து காலை 9.30 மணிக்கு அதே வழித்தடங்கல் வழியே முல்லைத்தீவை வந்தடையும்.

இரண்டாவது பேருந்து சேவையானது முல்லைத்தீவிலிருந்து பிற்பகல் 1.45 மணிக்கு புறப்பட்டு முள்ளியவளை தண்ணீரூற்று ஊடாக குமுழமுனையை சென்றடைந்து இப்பேருந்தானது மீண்டும் குமுழமுனையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பிற்பகல் 4.30 மணிக்கு புறப்படும்.

இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் மாத்தளன், குமுழமுனை வாழ் மக்கள் பெரும் நன்மை அடைவார்கள் என முல்லைத்தீவு சாலை முகாமையாளர் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். (2-302)




# வில்பத்து சரணாலய காணிகள் மக்களுக்கு முறையாக பகிர்ந்தளிப்பு

## ஹுனைஸ் பாரூக் எம்.பி. கூறுகின்றார்

வில்பத்து சரணாலய காணிகள் முசலி பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுக்கு பிழையான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பொய்யான பிரசாரங்கள் பலரினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.

முசலியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் ஊடகங்களுக்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், வில்பத்து சரணாலயம் முசலி பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுக்கு பிழையான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பொய்யான பிரசாரங்கள் பலரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அக்கருத்து பிழையான கருத்து என கூறுவது மாத்திரமின்றி குறித்த கருத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்.

வில்பத்து சரணாலயத்துக்கு ஒரு எல்லை இருக்கின்றது. "மோதரகம ஆறு" என்ற ஆறு தான் வில்பத்து சரணாலயத்துக்கான எல்லையாக உள்ளது. ஆற்றுக்கு அப்பாற்பட்ட பிரதேசத்தில்தான் 1990ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த குடும்பமும் தற்போது இருக்கின்ற குடும்பங்களும் வாழ்ந்து வருகி ன்றன. அவர்கள் குடியேற்றமும் செய்யப்பட்டுள்ளனர்.

இங்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பது என்பது, முறைப்படி வனப்பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் முறைப்படி அத்திணைக்களத்திடம் இருந்து விடுவிக்கப்பட்டு பிரதேச செயலாளரினூடாக மக்களுககு முறையாக கையளிக்கப்பட்டு ள்ளது. அதே போன்று அரசிற்கு சொந்தமான காணிகள், அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்கின்ற மக்களுக்கு 1/2 ஏக்கர் காணி வீதம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இவை தனி முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல. தமிழ், சிங்கள குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதில் கடற்படையினரினாலும் இராணுவத்தினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்களில் வாழ்ந்த மக்களுக்கே அதிகளவான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் சுமார் 735 ஏக்கர் முள்ளிக்குளம் காணியும் சுமார் 50 ஏக்கருக்கும் மேற்பட்ட சிலாபத்துறை காணியும் அதேபோன்று சிங்கள மக்களுக்கு சொந்தமான கஜிவத்தை காணியும் படையினரினால் கையற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கு மாற்றீடாக குறித்த இடங்களில் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக தனியார் யாருக்கும் காணிகள் வழங்கப்பட்டிருந்தால், அல்லது அவர்கள் காணிகளை அபகரித்திருந்தால் அதனை பரிசீலிப்பதும் அதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பது குறித்து நாங்கள் ஆட்சேபனை இல்லை. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின் அடிப்படையில் மாத்திரமே இக்காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# 'விபத்துக்களை கட்டுப்படுத்தல்' விழிப்புணர்வு கருத்தரங்கு

(முக்கொம்பன்)

ஐக்கிய நாடுகள் உலக வீதி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்தினால் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு கிளி/முரசு மோட்டை முருகானந்தா கல்லூரியில் கடந்த 8ஆம் திகதி முதல் முறையாக மாணவர்கள், ஆசிரியர்கள் ஊடாக நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸாரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தினர்.

வீதிகளில் தினந்தோறும் நடைபெறுகின்ற விபத்துக்களினால் உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்பட்டு மாணவர்களும் பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாக எடுத்துரைக்கப்பட்டது. (2-283)

# நந்திக்கடலின் சேற்றை அகற்றி ஆழமாக்குக!

## கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, வட்டுவாகல் நந்திக்கடல் ஆற்றின் சேற்றை அகற்றி அதனை ஆழமாக்கித் தருமாறு நந்திக் கடலில் கடற்றொழில் செய்யும் கடற்றொழிலாளர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மக்களின் வாழ்வாதாரமே நந்திக்கடலாகும். வட்டுவாகல் மற்றும் நாயாறு பகுதிகளில் சிறப்பான தொழில் இடம்பெறுவதனால் முல்லைத்தீவு மக்களின் வாழ்வாதாரம் உயரும். கடந்த காலங்களில் இந்த ஆறுகளிலிருந்து பிடிக்கப்படும் இறால்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தற்போது வட்டுவாகல் ஆற்றில் சேறு நிரம்பிக் காணப்படுவதன் காரணமாக இறால உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வட்டுவாகல் நந்திக்கடல் ஆற்றை ஆழமாக்குவதன் மூலம் தாங்கள் நன்மையடைய முடியும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1139



## அந்தப்புர ரகசியம்!

...அதன்பின் அவள் எப்படிப்பட்டவள் என்று அறிந்து கொள்வதே மேல் என்று கருதிய மன்னர் சந்திரிகாவின் குணங்களை ஆராய ஒற்றர்களை நியமித்தார்.

ஒற்றர்கள் அவளைப் பற்றிய முழு விபரங்களைக் கூறியதைக் கேட்டதும், மன்னருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

சந்திரிகா தன் தாயின் குணத்திற்கு நேர் மாறானவள் என்று தெரிந்தது.

சில விடயம் தன் காதில் விழுந்தாலும், அதை ஊர் முழுக்க டமாரம் அடிப்பவள் அவள என்ற உண்மை தெரிந்தது.

"கடவுளே! நான் ராணியிடம் பகிர்ந்து கொண்ட ரகசியங்களை இந்தப் பெண் ஊரறிய டமாரம் அடித்து விட்டாளோ" என்று பயந்து போன மன்னர், உடனே ராணியிடம் வந்து "புதிய பெண் சந்திரிகாவிடம் நான் உனக்குக் கூறிய ரகசியங்களில் ஏதாவது சொல்லிவிட்டாயா?" என்று கேட்க, மணிமாலா, "சொன்னேனே! விஜயபுரி மன்னர் நம் மீது போர் தொடுக்கத் திட்டமிட்டு உள்ளார் என்று நீங்கள் கூறிய ரகசியத்தை அவளிடம் சொன்னேன்!" என்றாள்.

மன்னரின் தலையில் இடி விழுந்தது போல் ஆயிற்று.


உடனே தன் ஒற்றர்களை அழைத்து சந்திரிகா அரண்மனையை விட்டு எங்காவது வெளியே சென்றாளா, யாருடனாவது பேசினாளா என்று அறிந்து வரப் பணித்தார்.

அரண்மனைக் காவலர்கள் வாயிலாக சந்திரிகா அன்று காலையிலேயே எங்கோ வெளியே சென்று விட்டாள் என்றும் இதுவரை வரவில்லை என்றும் கூறினர்.

ஒற்றர்கள் சந்திரிகா மயானத்தில் சுற்றித் திரிந்தாள் என்றும், பிறகு கோயிலுக்குச் சென்றாள் என்றும் கூறினர்.

மன்னருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

சந்திரிகாவைத் தேடி இழுத்து வரச் சொன்னார்.



அந்த சமயம் அவளே



உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டதும் மன்னர் பரபரப்புடன், "அந்தப்புரத்தை விட்டு நீ ஏன் வெளியே சென்றாய்?" என்று கேட்க, அவள் "மகாராஜா! எனக்கு எந்த விடயம் காதில பட்டாலும் உடனே அதை யாரிடமாவது கூறி விட வேண்டும்.

ஆனால், என் தாய் இங்கு எத்தகைய பணி புரிந்தாள் என்றும் தெரியும்.

மகாராணி நேற்று என்னிடம் விஜயபுரி மன்னரின் படை எடுப்பைப் பற்றி கூறியவுடன், என்னால் சும்மாயிருக்க முடியவில்லை.

யாரிடமாவது கூறாவிட்டால் தலைவெடித்து விடும் போல் இருந்தது.

ஆனால் அந்தப்புர ரகசியத்தை வெளியிட்டாலும் ஆபத்து! அதனால், நேராக மயானம் சென்று, என் தாயை அடக்கம் செய்த இடத்தில் அந்த ரகசியத்தை என் தாயின் ஆத்மாவிடம் கூறினேன். "இந்த யுத்தம் நடைபெறக் கூடாது!" என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டேன்" என்றாள்.

தான் நினைத்தவாறு இல்லாமல் மிகவும விவேகத்துடன் நடந்து கொண்ட சந்திரிகாவின் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து போன மன்னர். தன் விரலிலிருந்த மோதிரத்தை அவளுககுப் பரிசாக கொடுத்தார்.

கொடுத்த பின், "சந்திரிகா! நான் மோதிரம் தந்தது ஓர் அந்தப்புர ரகசியம். உன்னை யாராவது மோதிரத்தைப் பற்றிக் கேட்டால் நீ உண்மை சொல்லக் கூடாது!" என்று சொல்ல, சந்திரிகா, சிரித்துக் கொண்டே தலையாட்டினாள்.

(முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

13 05.2015

- 1619 - டச்சு அரசியல்வாதி ஜொகான் வன் ஒல்டென் பார்னவெல்ட் ஹேக் நகரில் நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் தூக்கிலிடப்பட்டார்.
- 1648 - டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.
- 1787 - ஆஸ்திரேலியாவில் குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கென 11 கப்பல்களில் 772 சிறைக் கைதிகளையும் குற்றவாளிகளையும் ஏற்றிக்கொண்டு கப்டன் ஆர்தர் பிலிப் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.
- 1830 - எக்குவாடோர் விடுதலை அடைந்தது.
- 1861 - பெரும் வால்வெள்ளி ஒன்று ஆஸ்திரேலியாவில் அவதானிக்கப்பட்டது.
- 1880 - நியூ ஜேர்சியில் மென்லோ பூங்காவில் எடிசன் மின்சாரத்தில் இயங்கும் தனது முதலாவது தொடரூந்தை சோதித்தார்.
- 1888 - பிரேசில் அடிமைமுறையை இல்லாதொழித்தது.
- 1913 - நான்கு இயந்திரங்களினால் ஆன முதலாவது விமானத்தை ஈகர் சிபோர்ஸ்கி என்ற ரஷ்யர் இயக்கினார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தினுள் நாசி ஜேர்மனியர் புகுந்ததை அடுத்து அதன் அரசி வில்ஹெல்மேனியா பிரித்தானியாவுக்கும் இளவரசி ஜூலியானா தனது குழந்தைகளுடன் கனடாவுக்கும் தப்பி ஓடினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வட ஆபிரிக்காவில ஜேர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப் படைகளிடம் சரணடைந்தனர்.
- 1952 - இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1954 - சிங்கப்பூரில் தேசியத்துக்கு எதிராக சீனப் பாடசாலை மாணவர்களின் போராட்டம் இடம்பெற்றது.
- 1960 - உலகின் ஏழாவது உயர மலையான தவுளகிரியின் உச்சியை சுவிட்சர்லாந்து மலையேறிகள் இருவர் முதன் முதலில் அடைந்தனர்.
- 1967 - சாகிர் உசேன் இந்தியாவின் முதலாவது முஸ்லிம் குடியரசுத் தலைவர் ஆனார்.
- 1981 - ரோமில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
- 1998 - இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சீனர்களுக் கெதிராக இனக்கலவரம் ஆரம்பமானது.
- 1998 - இந்தியா மேலும் இரண்டு அணுகுண்டுச் சோதனைகளை மேற்கொண்டது. இந்தியா மீது ஐக்கிய அமெரிக்கா, மற்றும் ஜப்பான் பொருளாதாரத் தடையைக் கொணர்ந்தன.

### பிறப்புக்கள்

- 1882 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (இ. 1963)
- 1905 - பக்ருதின் அலி அகமது, இந்தியக் குடியரசுத் தலைவர், (இ. 1977)
- 1918 - பாலசரஸ்வதி, பரத நாட்டிய மேதை (இ. 1984)
- **1956 - ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், இந்திய குரு**

### இறப்புகள்

- 1898 - பி. ஆர். ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர் (பி. 1872)
- 1978 - வி. தெட்சணாமூர்த்தி, தவில் மேதை (பி. 1933)
- 2000 - தாராபாரதி தமிழ்க்கவிஞர் (பி.1947)
- 2001 - ஆர். கே. நாராயண், இந்திய நாவலாசிரியர் (பி. 1906).

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் 1956 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி தமிழ்நாட்டில் உள்ள பாபநாசத்தில், தமிழ் வேங்கட ரத்னம் என்ற மொழி வல்லுனருக்கும் விசாலாட்சி என்பவருக்கும் மகனாக பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

தனது சீடர்களால் ஸ்ரீஸ்ரீ என்று மரியாதையுடன் அழைக்கப்படும் இவர், ஒரு புகழ்பெற்ற இந்திய குரு ஆவார். வாழும் கலை என்ற நிறுவனத்தை தோற்றுவித்தவர். இந்நிறுவனம் பண்டைய இந்திய அறிவுச் செல்வத்தை நிகழ்காலத்திற்கு ஏற்ப மாற்றியளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இவர் ஆதி சங்கரர் பிறந்த நாளில் பிறந்ததால் அவருக்கு சங்கர் என்று பெற்றோர் பெயரிட்டனர். நான்கு வயதிலேயே பகவத் கீதை என்கிற இந்து புனித நூலை ஒப்பிக்கத் தெரிந்து வைத்திருந்தார்.

இவர் மூச்சை உடம்பையும் மனதையும் ஆரோக்கியமாகவும் அமைதியாகவும் வைத்துக் கொள்ள ஒரு சாதனமாகக் கருதுகிறார். இவர் தியானம் செய்வதுடன் மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறார். இவருடைய நோக்கம் அறிவின் மூலம், மன உளைச்சலும் விரோதமும் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவது. அவர் கருத்தின்படி "உண்மை என்பது நேரானதல்ல, உருண்டையானது, எனவே அது இரு எதிர் மாறான துருவங்களைக் கொண்டுள்ளது. எந்த உருண்டையான பொருளும் இரு துருவங்களை கொண்டிருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

129

'...ரஜினியின் "முத்து" அபார சாதனை!

ஜப்பானில் 23 வாரம் ஓடியது

ரஜினிகாந்த் நடித்த 'முத்து' அபார சாதனை நிகழ்த்தியது. ஜப்பானில் 23 வாரங்கள் ஓடியது.

'அண்ணாமலை' வெற்றிக்குப் பிறகு, கவிதாலயா நிறுவனத்துக்காக ரஜினி நடித்துக்கொடுத்த படம் 'முத்து.'

வழக்கமாக இந்தி, கன்னடம், அல்லது தெலுங்குப் படங்களைத்தான், அவசியமான மாற்றங்களுடன் தமிழில் 'ரீமேக்' செய்து நடிப்பார், ரஜினி. ஆனால் 'முத்து', மலையாளத்தில் 'தேன்மாவின் கொம்பத்' என்ற பெயரில் வெளிவந்து வெற்றி பெற்ற படத்தை தழுவி எடுக்கப்பட்டதாகும். திரைக்கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்தார், கே.எஸ்.ரவிக்குமார். ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்தார்.

ரவிக்குமாரும், ஏ.ஆர்.ரகுமானும் இணைந்த முதல் படம் இது தான்.


பாடல்கள் வைரமுத்து.

**திருப்பங்கள்**

'முத்து' படத்தின் கதை, திருப்பங்கள் நிறைந்தது.

ஜமீன்தார் (சரத்பாபு) மாளிகையில் சாரட்டு வண்டியை ஓட்டும் தொழிலாளி முத்து (ரஜினிகாந்த்). இருவரும் உயிர் நண்பர்கள்.

சரத்பாபுவின் மாமா (ராதாரவி) தன் மகளை சரத்பாபுவுக்கு திருமணம் செய்து வைத்து, சொத்துக்களை அபகரிக்கத் திட்ட



மிடுகிறார். ஆனால், சரத்பாபு, ராங்கநாயகி (மீனா) என்ற நாடகக்காரியை காதலிக்கிறார். மீனாவோ, ரஜினியை விரும்புகிறார்.

ராதாரவியின் சூழ்ச்சியால் ரஜினி மீது சந்தேகம் கொள்ளும் சரத்பாபு, அவரை அடித்து வெளியே விரட்டி அடிக்கிறார்.

அந்த சமயத்தில்தான், சரத்பாபுவிடம் அவர் தாயார் (ஜெயபாரதி) ஒரு ரகசியத்தை வெளியிடுகிறார்.

உண்மையில், ரஜினியின் தந்தைதான் ஜமீன்தார். அவர் தம்பியான ரகுவரன் (சரத்பாபுவின் அப்பா) ராதாரவியின் தூண்டுதலால், சொத்துக்களை அடைய போலிப் பத்திரங்களை தயாரிக்கிறார்.

இது தெரிந்த தும், ஜமீன்தார் ஏற்கனவே அளித்த வாக்கு றுதியின்படி ஜமீன் வாரிசாக ரகுவரனின் குழந்தையை (சரத்பாபு) அறிவித்து விட்டு, ஜமீனைவிட்டு வெளி யேறுகிறார். அவருடைய கைக்குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஜெயபாரதி ஏற்கிறார்.

ரஜினிதான் உண்மையான ஜமீன்தார் என்பதை தெரிவிக்கக்கூடாது என்று வாக்குறுதி பெற்றுக்கொள்கிறார், ஜமீன்தார்.


இந்த வரலாற்றை ஜெயபாரதி தெரிவித்ததும், சரத்பாபு திருந்துகிறார். ஆனால் ராதாரவியால் தாக்கப்பட்டு, கிணற்றில் வீசப்படுகிறார்.

அவரை பழைய ஜமீன்தார் காப் பாற்றி விட்டு, யாருக்கும் தெரியாதவாறு ஜமீனை விட்டு வெளியேறுகிறார் பிரிந்த வர்கள் ஒன்று சேருகின்றனர்.

'கட்டிப்பிடிச்சு ஒரு உம்மா கொடு'

திரைக்கதையை சிறப்பாக அமைத்து, விறுவிறுப்பாக படத்தை எடுத்திருந்தார், ரவிக்குமார்.

ரங்கநாயகியாக நாடக மேடையில் மீனா நடிக்கும்போது, ரஜினிகாந்த் செய்யும் தமாஷ்கள், தியேட்டரில் சிரிப்பு அலைகளை எழுப்பின. திசை மாறி மீனாவும், ரஜினியும் கேரளாவுக்கு சென்றுவிட, அங்கு வழி கேட்க மொழி தெரியாமல் திண்டாடுகிறார், ரஜினி. *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து–138**

....**கா**துல கட்டையத் தேவர் மகன் அழகுசிங்கம் ஒண்ணேகால்.. எழுதப்பா.

தடவுன ரூபாய நழுவ விட்டுவிட்டு கிழட்டு யான மாதிரி முழு ஒடம்பு திருப்பி எவண்டா அவன்னு பாத்தா அடிச்சுவச்ச கல்லுச் செல மாதிரி கையில ஒண்ணேகால்ரூவாயப் புடிச்சுக் கெழவன ஒரு ஒரசு ஒரசி நிக்கிறான் அழகுசிங்கம்.

தன்னையும் மகனையும் பெணைஞ்சு பெணைஞ்சு செஞ்ச பெறவின்னு ஒரே பார்வையில தெரிஞ்சு போகுது கெழவனுக்கு. அவன் கண்ணுலயும் மூக்குலயும் அப்படியே அப்பன் அப்பி வச்சிருக்க, நெத்தி காது இத்தியாதிகள்ல தன் அடையாளம் பாத்து மனசுல ஒரு இருட்டு மூலையில சந்தோசப்பட்டுக்கிருது கெழட்டு உசுரு.

இருந்தாலும் வைராக்கியத்த விடுமா வங்கெழடு?

மொய் எழுதுறவன் மூலமா எகத்தாளத்துக்கு எசப்பாட்டுக் கட்ட ஆரம்பிக்கிறாரு சடையத்தேவரு.

காத்துவாக்குல யாரோ கட்டையத்தேவன் மகன்னு சொன்ன மாதிரி இருந்துச்சு. அது எந்தக் கட்டையத் தேவ ன்னு கேளுங்கப்பா.

படிக்காத சடையத்தேவனுக்கே இந்த லந்துலகள இருந்துச்சுன்னா... அஞ்சாவது பத்து வருசம் படிச்சவனுக்கு எம்புட்டு இருக்கும்? அடிச்சான் திருப்பி அழகுசிங்கம். இந்த ஊர்லயே சத்துக் கெட்டுப்போன சடையத்தேவர்ன்னு ஒரு ஆளு இருக்காரில்ல... அந்தச் சடையத்தேவன் மகன் கட்டையன் தான் எங்கப்பன்னு எழுதுங்கப்பா.

சீலப்பேனு செந் தட்டி சொல்றதயெல்லாம் நம்பி எழுதாதீக. தம் மகன் யாருன்னு எம் மகன்தான் சொல்லணுமப்பா.

கட்டையன்தான் எங்கப் பன்னு நான் சொல்றனப்பா. இப்படித்தான் அனாதிக அஞ்சாறு ஊர்ல சொல்லி அலையுதுகப்பா.

எங்க ஆத்தாளத் தள்ளி வச்சிட்டாலும் அப்பன் இல்லேன்னு போயிராதப்பா.

அப்பன் வேணும்ன்னு ஆசப்படற பயலுகளயெல் லாம் ஆத்தாளுக்கு இன் னொரு கல்யாணம் பண்ணி வைக்கச் சொலுங்கப்பா.

கெழவா! ஒன்னியக் கொல் லாம விடமாட்டேன். தத்துப் பித்துன்னு தவ்விட்டான் அழகுசிங்கம்.

போடா! போடா பொடிப் பயலே. சோத்துல கெடக்குற கல்லப் பெறக்க முடியாதவன சொக்கநாதர் கோயில் கல்லப் பெரட்டப் போறானாம் கிண் டல் பண்ணுது கெழடு.



கெழவனும் பேரனும் மொமொதலா முட்டிக்கிட்டு நிக்கிறதப் பாத்ததும் பந்தியில இருந்த பாதிசனம் எந்திருச்சு வந்திருச்சு.

உருமாப் பெருமாத் தேவரு உள்ள வந்து விழுகிறாரு.

ஏம்பா சடையதேவா! இதென்னப்பா சின்னப் பிள்ளைத்தனமா இருக்கு. அவன் ஒன் பேரன்தான்னு ஊருக்கே தெரியுமில்ல... உரிமை இல்லேன்னாலும் ஒறவு இல்லேன்னு போயிருமா?

அடப் போப்பா... வாந்தியெடுத்த பொருளத் தூக்கி வாய்க்குள்ள போட்டுக்கிர முடியுமா? விட்டா வெறும்பய வீட்டுக்குள்ள வந்திருவான் போலிருக்கே! வரமாட்டேன்னு நெனைக்கிறியா? வாரேன்... விடிய்ய வாரேன்.

முறுக்கி நிக்கிற பேரனையும் மூக்கு வெடைக்கிற தாத்தனையும் பக்குவமாப் பிரிச்சுவிட்டுட்டுப் பந்தியில போய் ஒக்காந்திருச்சு ஊரு. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 இலங்கை அகதிகள் இன்று நாடு திரும்புவர்


**(கொழும்பு)**

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியாவிற்கு அகதிகளாக சென்ற 65 இலங்கையர்கள் இன்று மீண்டும் நாடு திரும்புவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் தலையீட்டில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

தமிழகத்தின் அகதி முகாம்களில் பல வருடங்களாக வாழ்ந்தவர்களே இவ்வாறு இன்று நாடு திரும்பவுள்ளனர் என மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்து ள்ளார்.

இவர்கள் இரண்டு விமானங்களில் நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளதாக அவர தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த இவர்கள் தமது சொந்த இடங்களிலேயே குடியமர்த்தப்படவுள்ளார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்தவர் களில் இந்தியாவில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமா னவர்கள் காணப்படுகின்றமை குறிப்பிட த்தக்கது. (இ-5)




# பிரதமருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

உதய கம்மன்பில் தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமயவே இவ்வாறு முறைப்பாடொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இன்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக முறைப்பாடு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



குறித்த முறைப்பாட்டை வழங்குவதற்காக கட்சி தலைவர் பலரும் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# நாமலின் கூற்று பிழையானது பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் கூற்று பிழையானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்குனுகொலபெலஸ்ஸவில் பங்கேற்ற கூட்டத்தில் சந்தேகத்திற்கு இடமாக சஞ்சரித்த இராணுவச் சிப்பாய் தண்ணீர் போத்தல் ஒன்றையே வைத்திருந்தார் என்ற நாமலின் கூற்று பிழையானது. நாமல் ராஜபக்ஷவின் இந்தக் கருத்து பொய்யானது.

குறித்த நபரிடம் உத்தியோகபூர்வ துப்பாக்கிக்கு பதிலாக மேலும் ஒரு துப்பாக்கி காணப்பட்டது.

அந்த துப்பாக்கி தற்போது காணாமல் போயுள்ளது. இந்த சம்பவம் தொடர்பிலும் ஏனைய நபர்கள் தொடர்பிலும் விசாரணைகள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நத்தைச்சூரி

Botanical Name:Borreria hispida
Family:Rubiaceae
Engl:Shaggy button weed
Sinh:Hin-getakola



இச்செடியானது ஓராண்டு, சில வேளைகளில் பல்லாண்டு வாழக் கூடியதாகும். ஒட்டிப்படரக் கூடியது. தண்டு நீளமாக இருக்கும். நாற்சதுரமான உரோமங்களைக் கொண்டதாக இருக்கும். தனியிலை, எதிரிலை அடுக்கம் எனக் காணப்படும். 1.2-2.5செ.மீ.நீளம். இலையின் இரு புறங்களிலும் மயிர்கள் போன்ற அமைப்புக் காணப்படும். இதன் இலைகள் நீள்வட்ட அல்லது கோளவடிவ அமைப்பைக் கொண்டது. இருபாலான, ஒழுங்கான பூக்கள், ஊதா நிறமுடையவையாக இருக்கும். உலர்ந்த மூடிய அமைப்பையுடைய பழங்கள், 3 மி.மீற்றர் நீளமுடையதாகும். வழுவழுப்பான விதைகள். மண்ணிறமுடையது. பங்குனி மாதத்திலிருந்து ஆவணி மாதம்வரை பூக்களை அவதானிக்கலாம்.

கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் பரம்பல் அதிகம். வெப்ப பிரதேசங்களில் அதிகம் காணலாம். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன்வேர் சிறுநன்னாரி வேர் போன்றிருக்கும். யாழ். மாவட்டத்தில் இதன் பரம்பல் அதிகம் காணப்படும். இதன்முழுச்செடியும் மருத்துவ குணம் மிக்கது.

இதன் விதைகள் உடல் உரமாக்கி, உடற்தேற்றி செய்கையுடையது. இதன் விதைகளை சேகரித்து நன்கு கழுவிநிழலில் உலர்த்திகோப்பி விதைகளுக்கு பதிலாக பயன்படுத்தினால் உடலுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

**நத்தைச்சூரி விதைக்கோப்பி**

கொத்துமல்லி-200 கிராம்
நத்தைச்சூரி விதை-50 கிராம்
நத்தைச்சூரி வேர்-[illegible] கிராம்
ஏலம் -10 கிராம்
சுக்கு-20 கிராம்
நற்சீரகம்-10 கிராம்

கொத்துமல்லிக்கு 50 கிராம் சீனி சேர்த்து வறுத்து ஏனையவற்றை தனித்தனியாக வறுத்து எடுத்து இடித்து, அரித்து வைத்துக் கொள்ளவும். சாதாரண கோப்பிக்கு பதிலாக இதனை தனியாகத் தயாரித்தோ அல்லது பாலுடன் சேர்த்து பாற்கோப்பியாக தயாரித்தோ பருகலாம். நரம்பு மண்டலத்திற்கும் உடலுக்கும் வலுவைக் கொடுக்கக் கூடியதாகும். நத்தைச்சூரி விதைகளைப் பொடித்து 2கிராம் அளவு எடுத்து வெந்நீரில் உட்கொள்ள வயிற்றோட்டம் குணமாகும்.

நத்தைச்சூரி வேர்-50 கிராம்
நெற்பதர் சாம்பல்-120 கிராம்
கருவேலன்பட்டை-50 கிராம்
கராம்பு-10 கிராம்

மேற்படி அனைத்தையும் பொடித்து நுண்ணிய பொடியாக்கி துணியில் அரித்து வைத்துக்கொள்ளவும். இதனைப் பற்பொடியாக பயன்படுத்தி பல்துலக்கிவர பற்களில் கறைகள் நீங்கி வெண்மையாக வருவதுடன் பற்களுக்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

நத்தைச்சூரிவேரையும் வெள்ளுள்ளியையும் சம அளவு எடுத்து இடித்து நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி உடலுக்குப்பூசி வர வாதநோய்களும் பித்தநோய்களும் அகலும்.

இதன் முழுச்செடியையும் எடுத்து நன்கு கழுவி சுத்தம் செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி நெய்யில் வதக்கி உணவில் சேர்த்துவர மூலநோய் அகலும்.

நத்தைச்சூரியை நன்கு கழுவி வாயில் வைத்து மென்று துப்பினால் வாய்த்துர்நாற்றம் நீக்குவதோடு பற்களுக்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

இதன் பச்சை வேர்களை நன்கு இடித்து 15 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் 20 நிமிட நேரம் ஊறவைத்து வடித்து வாய் கொப்பளித்து வர (Mouth wash) பல்வலி குணமாகும்.

விஷ ஜந்துகள் தீண்டி அதனால் ஏற்படும் வீக்கத்திற்கு நத்தைச்சூரி பூண்டுகளை எடுத்து நன்றாக அரைத்து வீக்கத்தின்மீது இரண்டு நாள் பற்றுப்போட வேண்டும்.

**டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்**
**M.D(Siddha)India**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**சித்தமருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் பிரதான நோக்கம் நாமல் குடும்பத்தை பழிவாங்குவதே

## நாமல் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி தற்போது தன் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருக்கமானவர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சஜின் வாஸ் குணவர்தனவின் நலம் விசாரிப்பதற்கு வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போலியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி தற்போது வரை முனனாள் அமைச்சர் ஜோனஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சஜின்வாஸ் குணவர்தனவை கைது செய்துள்ளார்கள் என கூறிய நாமல் ராஜபக்ஷ தன் மெய்ப்பாதுகாவலரான இராணுவ சிப்பாய், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்ய முயற்சி செய்வதாக போலியான குற்றங்களை சுமத்தியுள்ளார்கள் என அவர தெரிவித்தார்.

குறித்த இராணுவ சிப்பாய் துப்பாக்கியுடன் ஜனாதிபதி அருகில் சென்றதாக கூறியதனை நாமல் முற்றிலும் நிராகரித்தார்.

இராணுவசிப்பாய் கையல் இருந்தது தண்ணீர் போத்தலே தவிர துப்பாக்கி வைத்திருக்கவில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் குறித்த இராணுவ சிப்பாயின் கையில் இருந்தது துப்பாக்கி தான் என உறுதி செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரதமருக்கும் இரு அமைச்சர்களுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## தேசிய சுதந்திர முன்னணி உறுதி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும், முக்கிய அமைச்சர்கள் இருவருக்கும் எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி உறுதபடத் தெரிவித் துள்ளது.

அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்துள்ளன.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு போதுமானது.

நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிலரும் இந்த தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதாக இணங்கியுள்ளனர்.

ஊழல்மோசடிகளை இல்லாதொழிப்பதாக சூளுரைத்த ரணிலும் அவரது ஆதரவாளர்களுமே அதிகளவு மோசடி செய்துள்ளனர்.

பிரதமர் மற்றும் ஏனைய இரண்டு அமைச்சர்களுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி மீண்டும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 90 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 50 | 30 | 40 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80 | 60-70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 80 | 50 | 40 |
| கோவா | 6+0 | 40 | 70 | 60 | 40 | 60 |
| கரட் | 150 | 100 | 120 | 140 | 100-120 | 100 |
| பூசணி | 30 | 50 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 140 | 50-80 | 90 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 100 | 140 | 140 | 130 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 40 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 | 100 | — | 80 |
| பயற்றங்காய் | 140 | 80 | 110 | 60 | 100 | 160 |
| லீக்ஸ் | 200 | 160 | 120 | 200 | 140 | 180 |
| பீற்றூட் | 60 | 80 | 60 | 80 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 100 | 50 | 70 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 320 | 300-400 | 350 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 50 | 50 | — | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 40 | 30 | 25 |
| தேசிக்காய் | 140-200 | 200 | 150 | 200 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 50 | 40 | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 369




நிஷா விஷ்வா



வெற்றி வரும்வரை
குதிரை வேகத்தில் ஓடு
வெற்றி வந்த பிறகு
குதிரையை விட
வேகமாக ஓடு
அப்போது தான் உன்
வெற்றி உன்னிடத்தில்
நிலைத்து நிற்கும்.

மாதுஷன் சிவராசா




லோஜி லோஜிதா

தாதி : அந்த பேஷன்டுக்கு மயக்க மருந்து கொடுத்தும் மயக்க நிலைக்கு போகல டாக்டர்!



டாக்டர் : அப்புறம் என்னாச்சு?

தாதி : கொஸ்பிட்டல்பில் எவ்வளவு ஆகும் என்று சொன்னதும் உடனே மயக்கம் ஆகிட்டாரு.

எட்வின் டேவிட்




வேணு வேணுசன்




சாலினி பத்மநாதன்



நான் அவளைப் பார்க்க அவள் என்னைப் பார்க்க எங்களை அவள் அண்ணன் பார்க்க

கடைசியில்

என்னை எல்லோரும் ஆஸ்பத்திரியில் வந்து பார்த்தனர்.



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2015~15.06.2015



**வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும் நேரம் இந்நேரம்! தவறு செய்வதைத் தட்டிக் கேட்க தயங்காத மேட இராசி நேயர்களே!**

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனுடன் 5 இற்கு அதிபதியான சூரியன் இணைந்திருப்பதால் உத்தியோகம் சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உயர் பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென் படுகின்றன. குடும்ப ஒற்றுமை பலப்படும்.

புத-ஆதித்ய யோகம், பரிவர்த்தனை யோகம், குருச்சந்திர யோகம ஆகிய மூன்று யோகத்துடனும் வைகாசி மாதம் பிறக்கிறது. கைவீசி நடக்கும் பிள்ளைச் செல்வங்களின் கனிவான முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொய் பேசும் மாந்தர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். புதிய திருப்பங்களை காணப்போகிறீர்கள்.

இதுவரையில் அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் மாதக் கடைசியில் சப்தம ஸ்தானத்திற்கு செல்லப் போகிறார். பார்க்கும் சனியால் ஆரோக்கியப் பாதிப்புகள் அடிக்கடி ஏற்பட்டு அகலும். வக்ர இயக்கத்தில் செல்வதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. என்றாலும், வாழ்க்கைத் துணை மற்றும் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படும். இதுபோன்ற காலங்களில் சிவாலயம் சென்று சனி பகவானை முறையாக வழிபடுவது நல்லது.

'கருநிறக் காகம் ஏறி காசினியெங்கும் பவனி வரும்' சனி பகவானுக்கு கருப்பு வண்ணத்தில் வஸ்திரம் அணிவித்து இரும்புச்சட்டி, எண்ணெய் போன்றவற்றைத் தானமாகக் கொடுத்து அன்னதானமும் செய்தால் வாழ்வில் திருப்பங்கள் ஏற்படும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

உங்கள் ராசிக்கு 3, 6 இற்கு அதிபதியானவர் புதன். அவர் மே 24 ஆம் திகதி மேடத்தை நோக்கி வக்ர இயக்கத்தில் வருகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. சகோதர ஸ்தானம் மற்றும் உத்தியோக ஸ்தானத்திற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் சகோதர ஒற்றுமை குறையும். உடன பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவார்களா? என்பது சந்தேகம்தான். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. நீண்டதூர மாறுதல்களால் ஒருசிலர் நெஞ்சம் கலங்கலாம். அ[illegible] மேலதிகாரிகளை அனுசரித்துச் சென்றால் மிகப்பெரிய பலன்களை அடைய முடியும். ஜூன் 6 ஆம் திகதி இடபத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால் மாதக்கடைசியில் மாமன, மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறலாம்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2, 7 இற்கு அதிபதியான சுக்ரன் 4 இல் சஞ்சரிப்பது யோகம்தான். பழைய வாகனங்களை விற்றுவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும். வீடு கட்ட உறவினர்களின் ஒத்துழைப்பும் உண்டு.

**சந்தோஷம் தருமா சனிப்பெயர்ச்சி?**

இதுவரை அஷ்டமத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் ஜூன் 12 ஆம் திகதி முதல் சுமார் 3 மாத காலத்திற்கு துலாம் ராசிக்குள் வக்ர இயக்கமாகச் செல்கிறார். மீண்டும் சனி வக்ரம் பெறுகிறாரே என்று நீங்கள் நினைக்கலாம்.




இந்த முறை ஏற்படும் வக்ரத்தால் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படாது. என்றாலும், தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். திசாபுத்தி வலுப் பெற்றவர்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். அதே நேரத்தில் ஜூலையில் குருப்பெயர்ச்சியாகப் போவதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. குருபார்வை உங்கள் ராசியில் பதியப் போகிறது அல்லவா?

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ராசிநாதன் செவ்வாய் மாதத்தின் கடைசி நாளில் அதாவது ஜூன் 15 ஆம் திகதி மிதுன ராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். இம்மாதம் முருகப் பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுபச்செலவுகள் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உடன்பிறப்புகள் உங்கள் கடன் சுமை குறைய வழி வகுத்துக் கொடுப்பர். கூடுதல் பணம் கைகளில் புரண்டாலும் மாதக் கடைசியில் மருத்துவச் செலவுகள்குறையலாம் கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குழந்தைகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம். அதன் குணத்தில் மாறுபாடுகள் ஏற்படலாம். செவ்வாய்க் கிழமை தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபாடு செய்வது நல்லது. சனியின் வக்ர இயக்க காலத்தில் பொறுமையைக் கடைபிடியுங்கள். விரதம், வழிபாடுகளால் வியக்கும் வாழ்க்கை அமையும்.

## வாய்ப்புகள் வாயிற் கதவை தட்டும் நேரம் இந்நேரம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**கல்யாணக் கனவுகள் கைகூடும் நேரம் இந்நேரம்! இன்பங்களை மட்டுமே எந்த நாளும் சந்திக்க விரும்பும் இடப இராசி நேயர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சுக்ரனும், புதனும் பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். உங்கள் ராசியிலேயே சுகாதிபதி சூரியனும், சப்தம விரயாதிபதியான செவ்வாயும் சஞ்சரிக்கிறார்கள். எனவே, இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடைவதில் இருந்த தாமதங்கள் அகலும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். குடும்ப முன்னேற்றம் கூடும். வருமானப் பெருக்கத்திற்கு வழி அமைத்துக் கொள்வீர்கள், வசதிகள் பெருகும்.

புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். குழந்தைகள் எந்த துறையில் படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்தத் துறையிலேயே இடம் கிடைத்து கல்வியைத் தொடரும் வாய்ப்பு கிட்டும். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சந்திரனை சகோதர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உச்சம் பெற்று பார்ப்பதால் சகோதரர் வழியில் சகாயங்கள் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர்.

இம்மாதக் கடைசியில் சனி பகவான் உங்கள் ராசிக்கு ஆறாமிடத்திற்கு வக்ர இயக்கத்தில் செல்கிறார். கண்டகச் சனியின் ஆதிக்கம் மாறுவதால் கவலைகள் குறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையும். சனிக்கிழமை தோறும் சனி பகவானை வழிபட்டு வருவதோடு, எள் தீபம் ஏற்றி, கவசம் பாடி [illegible] நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

மே 24 ஆம் திகதி மேட ராசியில் புதன் வக்ரம் அடைகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது தனவிரயங்கள் ஏற்படலாம். குடும்பச் சுமை கூடும். பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். எதையும் வாங்க நினைத்தால், பணம் கையில் புரளும் பொழுது வாங்கி விடுவது நல்லது. குறிப்பாக குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஜூன் [illegible] ஆம் திகதி இடபத்திற்கு புதன் வ[illegible] போகிறார். இதன் விளைவாக ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு மேல் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வரவு திருப்தி தரும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் ஆறாமிடத்திற்கு அதிபதியாக விளங்குகிறார். அவர் மே 30 ஆம் திகதி கடகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வழக்கில் வெற்றி கிடைக்கும். வீண் விவகாரங்களிலிருந்து விடுபடுவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடுத்துவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும்.

**சனி மாற்றம் சந்தோஷம் தருமா?**

இதுவரை கண்டகச் சனியாகச் சஞ்சரித்து வந்த சனி பகவான் ஜூன் 12 ஆம் திகதி துலாம் ராசியில் வக்ரம் பெறுகிறார். 3 மாத காலத்திற்கு துலாம் ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த வக்ர இயக்க காலம் உங்களுக்கு




உத்தியோக மேன்மையை உருவாக்கும். வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு ஒரு சிலர் விரும்பியபடியே தொழில் செய்ய முன்வருவர். உடல்நலம் சீராகும். ஒரு சிலருக்குப் புதிதாக தொழில் தொடங்கும் வாய்ப்புகள் வந்து சேரலாம்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 15 ஆம் திகதி மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயத்திற்கேற்ற தனவரவு வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் ஒரு சிலருக்கு வெகு விரைவில் வந்து சேரும். பூமி யோகம் ஏற்படும். உடன்பிறப்புகள் இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறலாம் இம்மாதம் வைகாசி விசாக நாளில் வடிவேலனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

வேதனைகள் நீங்கிச் சாதனை படைக்கும் மாதமாகும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபரத்தில் உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ள முன்வருவர். தாய்வழி ஆதரவும், தனவரவும் உண்டு. கணவன்-மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். குழந்தைகளின் கல்வி நலனிற்காக செலவிட்டு மகிழ்வீர்கள். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். புதிய மனை வாங்கும் யோகம் உண்டு. பெருமாள்வழிபாடு பெருமை சேர்க்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிபுரியும் இடத்தில் இருந்த தொல்லை அகலும். மாதக் கடைசியில் சுபச்செலவுகள் உண்டு.

## கல்யாணக் கனவுகள் கைகூடும் நேரம்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சட்டத்தில் அரசியல் தலையீடாது

(கொழும்பு)

நிதி மோசடி பொலிஸ் பிரிவு மற்றும் சட்டத்தை செயற்படுத்தும் எந்த பிரிவிலும் அரசியல் தலையீடு இன்றி அவை முழுமையான சுயாதீனத்துடன் செயற்படுகின்றது என்று தெரிவித்துள்ள பிரதமர் அலுவலகம், சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களில் அரசியல் தலையீடு இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாரிய நிதி மோசடிகள் நாட்டில் இடம்பெற்றிருந்த நிலையிலேயே, நிதி மோசடி பொலிஸ் விசாரணை பிரிவு ஏற்படுத்தப்பட்டது. பொலிஸ் கட்டளை சட்டத்தின் 55ஆவது பிரிவின் பிரகாரம், அமைச்சரவையின் அனுமதியுடன், பொலிஸ்மா அதிபரின் முழுமையான கண்காணிப்பு மற்றும் ஆலோசனைக்கு அமையவே இப்பிரிவு உருவாக்கப்பட்டது. நிதி மோசடி பொலிஸ் விசாரணை பிரிவு குறித்து அரசியல் களத்தில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இவ்வாறு 64 பிரிவுகள் இயங்கி வருவதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்துக்கு உள்ள அதிகாரங்களைத் தவிர மேலதிக அதிகாரங்கள் எதுவும் பொலிஸ் நிதி மோசடி பிரிவுக்கு வழங்கப்படவில்லை என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# விமலும் கம்மன்பிலவுமே சு.கவை சீரழிக்கின்றனர்





தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சீரழிப்பதாக வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பிங்கிரிய வீரபொக்குன என்னும் இடத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உதய கம்மன்பிலவும், விமல் வீரவன்சவும் மகிந்தவை காண்பித்து தங்களது இருப்பினை உறுதி செய்து கொள்ள முயற்சிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த இரண்டாம் நிலைத் தலைவர் ஒருவரை உருவாக்கத் தவறிவிட்டார்.

நீண்டகாலம் சுதந்திரக் கட்சியில் சேவையாற்றிய மைத்திரிபால சிறிசேன கட்சி குறித்து அதிருப்தியடைந்தே கட்சியை விட்டு வெளியேறினார்.

நான் மகிந்தவின் கட்சியும் அல்ல, மைத்திரியின் கட்சியும் அல்ல, நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன்.

மகிந்த ராஜபக்ஷ நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். அவர் மீது எனக்குள்ள மரியாதை என்றும் குறையாது.

மகிந்தவுக்காக குரல் கொடுப வர்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண டும். ஐக்கிய தேசியக் கட்சி மகிந்தவையும் அவரது குடும்பத்தையுமே அதிகம் இலக்கு வைக்கின்றது.

அதிகாரம் இல்லாத போதே இவ்வாறு செயற்படும் ஐக்கிய தேசிய கடசி, பூரண அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டால் என்ன நேரும் என்பதனை மகிந்தவுக்காக சத்தம் போடுபவர்கள் சிந்தித்து பார்க்க வேண்டுமென தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (இ-5)

# சமாதானம் இன்மையால் நீதிமன்று விசாரிக்க முடிபு

(கொழும்பு)

வடமத்திய மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ, அகில விராஜ் காரியவசம், தயா கமகே மற்றும் ரஞ்சன் ராம்நாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம், நேற்று முன்தினம் திங்கட்கிழமை தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் நீதிமன்றில் கடந்த முறை எடுத்துக்கொள்ளப்பட்ட போது சமாதானமாக செல்லுமாறு நகல் ஒன்று முன்வைக்கப்பட்டது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் 4 உறுப்பினர்களும் அந்நகலில் உள்ளடக்கப்பட்ட மன்னிப்பு என்ற விடயத்துக்கு ஒத்துவராததால் ஜூன் 11ஆம் திகதிக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகர ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கடந்த வருடம் விலகியிருந்த சமயம் மேற்படி நான்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தனக்கு பாதிப்பைஏற்படுத்தியிருந்தது என கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நேபாளத்தில் மீண்டும் நிலநடுக்கம்

நேபாளத்தில் மீண்டும் நில நடுகம் ஏற்பட்டதால் இந்தியத் தலைநகர் டில்லி, பீஹார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட இந்தியாவிலுள்ள வட மாநிலங்களிலும் மேற்கு வங்கத்திலும் நில நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

அசாம் தலைநகர் குவாஹாட்டியிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால், வீடுகளில் இருந்தும் அலுவலகங்களில் இருந்தும் மக்கள் வெளியேறினர். நில நிலநடுக்கம் ஏற்பட்டதால் டில்லி மெட்ரோ சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிக்டரில் 7.1 ஆக பதிவாகியது. இதனை இந்திய வானிலை ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது.

ஆனால், நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக இருந்ததாகவும். காத்மண்டுவில் இருந்து 83 கி.மீ. தூரத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

நேபாளத் தலைநகர் காத்மண்டு அருகே நிலநடுக்கம்மையம்கொண்டு நில நடுக்கம் ஏற்பட்டதாகவும். அதன் தாக்கமே வடமாநிலங்களில் நில அதிர்வை ஏற்படுத்தியிருப்பதகாவும் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 25ம் திகதி நேபாளத்தில் ஏற்பட்ட 7.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்துக்கு 7,000-க்கும் அதிகமானோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

# நேரத்தை மிச்சப்படுத்தும் நினைவாற்றல்

பயிற்சியின் மூலம் உங்களுடைய ஞாபக சக்தியை மேம்படுத்திக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு பெயர்களையும் இடங்களையும் திகதிகளையும் நினைவுபடுத்திக் கொள்ளும் முயற்சியில் பல நிமிடங்களை வீணடிக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருக்காது. உங்களுக்குப் பதிலாக தகவல்களை சேகரித்து வைத்துக்கொள்ளும் பொறுப்பை கலைளரியின் தலையில் கட்டி விடலாம்.

உங்களுடைய வாசிப்பு வேகத்தை மேம்படுத்திக் கொள்ளவும் ஞாபகசக்தியை அபிவிருத்தி செய்து கொள்ளவும் சில உத்திகள் உண்டு.

✷ படிப்பதில் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். எவ்வித நோக்கமும் இன்றி 'சும்மா' படிக்கிற வேலை வேண்டாம்.

அச்செழுத்துக்களில் மறைந்திருக்கும் அர்த்தத்தைக் கண்டு பிடியுங்கள். முக்கியமானவற்றை கோட்டிட்டு வைத்துக் கொள்ளுங்கள். கோடிட்டுப் படிப்பவை மனதில் ஆழப்பதியும்.

✷ அத்தியாயத் தலைப்புகள், உபதலைப்புகள், பெரிய எழுத்தில் அல்லது சாய்வெழுத்து அச்சில் உள்ளவை எளிதாக நினைவில் பதியும்.

✷ வாய்விட்டுப் படிப்பது வாசிப்பு வேகத்தைக் குறைக்கும்.

✷ சிலர் ஒவ்வொரு வார்த்தையாகப் படித்துக் கொண்டிருப்பார்கள். கருத்துக்கள் அரிதாகவே ஒற்றை வார்த்தையில் சொல்லப்படும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விரைந்து படிக்கிறவர் வார்த்தைகளை கூட்டாகவே படித்துக் கொண்டு போவார். அவருடைய கண்கள் ஒற்றை வார்த்தையிலேயே ஒட்டிக்கொண்டு நிற்பதில்லை.

புகையிரதத்தின் வேகத்தில் பக்கவாட்டுக் காட்சிகள் ஓடி மறைகிற மாதிரி வார்த்தைகள் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். வேகத்தின் காரணமாக முக்கியமான எதையும் நீங்கள் விட்டுவிடுவதில்லை.

✷ ஒரு அத்தியாயத்தை முடிக்க இத்தனை நிமிடங்களாகும் என்பதை தோராயமாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். அந்த நேரத்துக்குள் அதைப் படித்து முடியுங்கள்.

✷ புத்தகத்தின் ஒரு பகுதியை உச்ச வேகத்தில் படியுங்கள். கொஞ்சம் இடைவெளி விடுங்கள். ஆசிரியரின் பிரதான கருத்துக்களை சுருக்கி மனதில் பதியுங்கள். மிக நீண்டவிடயங்களை திரும்பவும் பார்த்துத் தெளிவதற்கு இம்முறை பயன்படும்.

✷ முக்கியமில்லாத விடயங்களை தைரியமாக ஒதுக்கி விடுங்கள்.

✷ மொழி வளம் உள்ளவரின் வாசிப்பு வேகம் உயர்ந்து காணப்படும். 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வார்த்தைகள் வரை அவருக்குத் தெரிந்திருக்கும்.

வானவில்லின் ஏழு நிறங்களையும் உங்களால் வரிசையாக ஞாபகம் வைத்துக்கொள்ள முடியுமா? ஆங்கிலத்தில் VIBGYOR என்ற ஒற்றைச்சொல் அந்த ஏழு நிறங்களையும் நினைவுபடுத்திக் கொள்ள உதவும்.

டாக்டர் ப்ருனோஃபர்ஸ்ட் ஞாபக சக்தி தொடர்பாக பல நூல்களை எழுதியவர். இன்சூரன்ஸ் கம்பனியில் தீ விபத்து பாலிஸியை மாற்றி வரும்படி அவர் மனைவி சொன்னார். டாக்டர் என்ன செய்தார் தெரியுமா? தம்முடைய அலுவலக மேசை தீப்பிடித்துக்கொண்ட மாதிரி படம் வரைந்தார். ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள நமக்குப் பழக்கமான மற்றொன்றை அத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். டாக்டர் கையாண்ட உத்தியும் அதுதான்.

ஞாபகசக்தி என்பது தசை மாதிரி. அது சோம்பி இருந்தால் பலவீனமடையும். தொடர்ந்து உபயோகிக்க வலுவடையும்.

**ஞாபகங்கள் தலைகாட்டும்**

'எனக்கு அத்தனை ஞாபகசக்தி கிடையாது' என்று குறைபட்டுக் கொண்டிருப்பதைவிட இருப்பதை முறையாகப் பயன்படுத்துவது நல்லது.

✷ எதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமோ அதன் மீது அதிக கவனம் செலுத்துங்கள்.

✷ நீங்கள் பார்த்தது, கேட்டது, படித்தது பற்றிப் பேசுங்கள், சிந்தியுங்கள், யாருக்காவது அன்பளிப்பு வழங்க வேண்டி இருக்கும். அதை எப்படி நினைவில் வைத்துக்கொள்வது? ஒரு பிடித்தமான பொருளை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தால் போதும். மறவாமல் பரிசுப் பொருளை வாங்கி விடுவீர்கள். விடயங்களை தொடர்புபடுத்திப் பார்ப்பதன் மூலமும் ஞாபகசக்தியை வளர்த்துக்கொள்ள முடியும். புதிய வார்த்தைகளை அவற்றுடன் தொடர்புடைய மற்ற வார்த்தைகளுடன் ஒப்பிடுவதும் புதிய வார்த்தை ஒன்றை அதற்குரிய சந்தர்ப்பத்தில் பொருத்திப் பார்ப்பதும் நல்ல உத்தி.

✷ சிலருக்கு நண்பகல் நேரத்திற்கு முன் குறிப்பான 8–10 (காலை) மணியளவில் மனப்பாடம் செய்வது எளிதாக இருக்கும். காரணம் அந்த நேரத்தில் நரம்பு மண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் பதிவுகள் குறைவு.

✷ மாலையில் நினைவாற்றல் 6–10 சதவீதம் குறைவாக இருக்கும். காலையில் படுக்கையைவிட்டு எழுவதில் இருந்து இரவு படுக்கப் போகும் வரை கணக்கிட்டால் நினைவாற்றல் படிப்படியாகக் குன்றுமே தவிர கூடுவதில்லை. ஞாயிற்றுக்கிழமையில் எதுவும் ஞாபகத்தில் தங்காது. அன்று எதையுமே 'லைட்'டாக எடுத்துக் கொள்கிற மனநிலையில்தான் இருப்போம்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி- மகிந்த கூட்டு ஒருபோதும் நடக்காது!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே கடந்த புதன்கிழமை நடைபெற்ற பேச்சவார்த்தை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மஹிந்தவை மீண்டும் குறுக்கு வழியில் உள்ளே கொண்டு வர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடமளிக்க கூடாது எனக் கூறியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ உள்வாங்கப்படும் எந்தவொரு ஏற்பாட்டுக்கும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் உடன்பட மாட்டார்கள் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

பெரும்பாலும்இது உண்மைதான் ஆனால் இந்த விடயத்தில் தமிழ் பேசும் மக்கள் அச்சம் கொள்ள எதுவும் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், மைத்திரி-மஹிந்த 'சமாதான பேச்சுவார்த்தை' இரு சாராரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றும் நோக்குடன் நடத்தியதொன்றே தவிர வேறொன்றுமல்ல.

மைத்திரிபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் (தவிசாளர்) ஆவார். மஹிந்த அக்கட்சியின் போஷகர்களில் ஒருவர். ஆனால், ஒரு கட்சியின் தலைவர்கள் இருவரிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையாக அந்த பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. எதிரிகளான இருக்கும் இரு குழுக்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையாகவே அது நடைபெற்றது.

உண்மையிலேயே ஒரே கட்சியில் இருந்த போதிலும் அவ்விரு சாராரும் எதிரிகளே. மஹிந்தவை தோற்கடித்தே மைத்திரிபால ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவிக்கு வந்தார். அது சாதாரண தேர்தலாகவன்றி வாழ்வா சாவா என்ற நிலையிலான தேர்தலாகவே அமைந்தது. இன்று தமது ஆதரவாளர்கள் பழி வாங்கப்படுவதாக கூறும மஹிந்தவின் ஆட்சியின் கீழ், மைத்திரிபாலவுக்கு கூட்டம் ஒன்றை நடத்த இடமொன்றை தேடிக் கொள்வதும் பெரும் பிரச்சினையாக இருந்தது.

தாம் தோல்வியடைந்திருந்தால் இப்போது ஆறடி நிலத்துக்குள்தான் இருப்பேன் என மைத்திரிபால பலமுறை கூறியிருக்கிறார். மஹிந்தவின் ஆட்கள் இதுவரை அதனை மறுக்கவும் இல்லை. அவர்களும் அக்காலத்தில் அவ்வாறானதோர் நிலைமை இருந்ததை ஏற்றுக்கொள்கிறார்கள் போலும். இரு சாராருக்கும் இடையிலான அந்தப் பகை தேர்தலுக்குப் பின்னரும் வளர்ந்து வந்துள்ளது. மஹிந்த இனி ஜனாதிபதியாக வர முடியாத வகையில் மைத்திரிபால, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் கீழ் மஹிந்தவின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மஹிந்தவும் சும்மா இருக்கவில்லை. அவரும் நாளதோறும் நாட்டில் விஹாரைகள் தோறும கூட்டங்களை நடத்தி மைத்திரிபாலவின் ஆட்சிககு எதிராக மக்களை தூண்டுகிறார். இந்தப் பின்னணியில்தான் மைத்திரிபால-மஹிந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. எனவேதான் இதனை சமாதான பேச்சுவார்ததையாக முதலில் குறிப்பிட்டோம். ஆனால், இந்த விடயத்தில் ஒரு சாராரும் நேர்மையாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தை மஹிந்த அரசியல் ரீதியாக செல்லாக் காசாகிப் போனால் தமக்கு அரசியல் எதிர்க்காலமே இல்லாமல் போய்விடும் என்று அச்சப்படும் ஒருசிலர் அவரை மீண்டும் அரசியல் ரீதியாக உயிர்ப்பித்து அதன்மூலம் தமக்கு வாழ்வழித்துக் கொள்ளும் நோக்குடன் ஏற்பாடு செய்த ஒன்றாகும். மறுபுறத்தில் மஹிந்தவுக்கு சற்றேனும் இடம்கொடுத்தால் அது தமக்கு ஆபத்தாகிவிடும் என்பதை மைத்திரிபாலவுக்கு தெரியாத விடயம் அல்ல. எனவே, அவருக்கும் இந்த பேச்சுவார்த்தையில் உண்மையான அக்கறை இருக்கும் என்று கூற முடியாது. ஆனால், ராஜபக்ஷ ஸ்ரீ.ல.சு.க. வுக்குள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர் என்பதையும் மைத்திரிபால அறிந்துள்ளார். கடந்த ஜனவரி மாதம் வரை ராஜபக்ஷ, ஸ்ரீ.ல.சு.க தலைவராக இருந்தவர்.

நாட்டில் சகல ஊடகங்களையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவர் அதன்மூலம் தமது கட்சிக்காரர்கள் மத்தியில் மட்டுமன்றி நாட்டிலும் தமது இமேஜை விசாலமாக்கி அவர்கள் தம்மை ஏறத்தாழ வணங்கும் நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தார். இந்த நிலையில்தான் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தாம் தெய்வமாக வணங்கிக் கொண்டிருந்தவர் திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டாலும் கட்சிக் காரர்களின் பக்தி அவரை விட்டுப்போகவில்லை. அவருக்கு ஸ்ரீ.ல.சு.க ஆதரவர்கள் மத்தியில் இன்னமும் பெரும வரவேற்பு இருக்கிறது. இது நியாயமானதே.

மைத்திரிபால இதனை நன்கு அறிந்திருக்கிறார். எனவே கட்சிக் காரர்களை பகைத்துக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. கட்சியின் சிலர் மஹிந்தவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போது அதனை எடுத்த எடுப்பில் நிராகரிக்க மைத்திரபால முற்படாததற்குக் காரணம் அதுவே.

ஆனால், ராஜபக்ஷவுக்கு கட்சிக்குள் மைத்திரிபால பெரிதாக இடம் கொடுக்கப் போவதில்லை என்பதும் தெளிவாக தெரிகிறது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு சில நாட்களுக்கு முன்னர் ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர் ஜனாதிபதியை சந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களத்தில் இறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டக்கள் இருப்பதனால் அதைச் செய்ய முடியாது என ஜனாதிபதி கூறியிருக்கிறார். இனி ராஜபக்ஷ பெறக்கூடிய அதி உயர் பதவி பிரதமர் பதவியே. அதற்கும் மைத்திரிபால வாய்ப்பு அளிக்காவிட்டால் அதுவும் வெறும் கனவாகிவிடும்.

கட்சியைப் பலப்படுத்தவே தாம் மஹிந்தவையும் மைத்திரிபாலவையும் ஐக்கியப்படுத்த முயற்சி செய்வதாக மஹிந்தவின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. இது அவர்களும் மஹிந்தவும் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் போடும் திட்டமாகும். தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுறுவோம் என மஹிந்த கனவிலும் நினைக்கவில்லை. எனவே தேல்தலில் தோல்வியடந்தவுடன் அவரும் அவரது கையாட்களும் மானசீகமாக பெரிதும் வீழ்ச்சியுற்றனர்.

அந்த நிலையிலிருந்த மஹிந்தவுக்கு மன உறுதியை வழங்கியவர்கள் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியினரும் தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியினரும் கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உருமயகாரர்களும் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணியினருமே.

மஹிந்தவின் தோல்வியை அடுத்து இந்த நான்கு கட்சிகளும் அரசியல் பிச்சைக்காரர்களின் நிலைக்கு தள்ளப்பட்டனர். அவர்கள் ஜனாதிபதித் தேர்தலின்போது இனவாதத்தை தூண்டி தமக்கு எதிராக செயற்பட்ட முறையினால் மைத்திரிபாலவும் தேர்தலின் பின்னர் இவர்களை திரும்பியும் பார்க்கவில்லை. இந்த நிலையில் இக் கட்சிகள் பெரும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டனர். அவர்கள் தனியே போட்டியிட்டு பிரதேச சபை ஆசனமொன்றையாவது பெற்றக் கொள்வது கடினமான காரியம். எனவே மஹிந்தவை எவ்வாறோ முன்னிறுத்தி அவரது அபிமானிகளின் வாக்குகளை கொள்ளையடித்தால் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள். அது மிக சாதுரியமான திட்டம்தான்.

எனவேதான் அவர்கள் மஹிந்தவை பிரதமராக்க வேண்டும் என்று சுலோகத்தை முன்வைத்தனர். முதலில் இதனை முன்வைத்தவர்கள் ஸ்ரீ.ல.சு.க.காரர்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். தாம் ஒரு நவீனகால மன்னர் என் நினைத்துக் கொண்டு நிறைவேற்ற ஜனாதிபதி பதவியை வகித்த மஹிந்த மற்றொரு நிறைவேற்று ஜனாதிபதியின் கீழ் பிரதமராக பதவி வகிப்பதில் மஹிந்தவுக்கு ஏற்படும் தன்மானப் பிரச்சினை இந்தக் கோரிக்கையை விடுப்பவர்களுக்கு ஒரு பிரச்சினையாக தெரியவில்லை.

தேர்தல் காலத்தில் மைத்திரிபாலவை புலம்பெயர் தமிழர்களின் கையாள எனக் குற்றஞ்சாட்டிய மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும் அதே மைத்திரிபாலவிடம் பிரதமர் பதவியைக் கேட்டுக் கெஞ்சுவது வேடிக்கையான விடயமாகவே தெரிகிறது.

தேர்தல் தோல்வியால் மனமுடைந்து இருந்த் மஹிந்தவின் சாதாரண ஆதரவாளர்களுக்கும் மஹிந்த வேண்டும் என்ற இந்த சுலோகம் ஆறுதலாகவும் ஊக்கமளிப்பதாகவும் அமைந்தது. எனவே அந்த நான்கு கட்சிகளும் மஹிந்த வேண்டும் எனறு வலியுறுத்தி நடத்திய கூட்டங்களுகன்கு பெருந்திரலான மக்கள் சமூகமளித்தனர்.

அதன் பிரகாரம் மஹிந்தவும் ஊக்கமடைந்து இருக்கிறார். அவரது குடும்பத்தினருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்புவதற்கும் ஓரளவாவது அரசியல் அதிகாரம் இருக்க வேண்டும் என அவர் கருதுகிறார் போலும். எனவேதான் அவர் மீண்டும் அரசியல் களத்தில் இறங்க முயற்சிக்கிறார். மானப் பிரச்சினையை அவர் கருத்திற் கொளள வில்லை போலும்.

இதன் ஓர் அங்கமாகவே அவரது குழுவினர் மைத்திரிபாலவை சந்திக்க முற்படுகின்றனர். இதில் அவர்கள் கூறுவதைப் போல் ஸ்ரீ.ல.சு.க.வை பாதுகாப்பது அல்லது ஒன்றிணைந்து ஐக்கிய தேசிய கட்சியை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தோல்வியுறச் செய்வது என்ற நோக்கம் இல்லை. தம்மை பாதுகாத்துக் கொள்வதே இந்த சந்திப்பின் நோக்கமாகும்.

உண்மையிலேயே ஸ்ரீ.ல.சு.க ஐக்கியப்பட்டால் ஐ.தே.க பெரும் நெருக்கடியை சந்திக்கும். ஏனெனில் நீண்ட காலமாக தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியடைந்து வந்த காரணத்தினால் ஐ.தே.க.வில் அமைப்பு ரீதியான பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால ஸ்ரீ.ல.சு.க ஐக்கியப்பட்டாலும் அக்கட்சி வெற்றி பெறும் என உறுதியாக கூற முடியாது.

எவ்வாறாயினும் மைத்திரிபால மஹிந்தவை உள்வாங்க மாட்டார் என்பதற்கே கூடுதலான அறிகுறிகள் தென்படுகின்றன. மஹிந்த மீண்டும் அரசியல் ரீதியாக பலம் பெறுவதானது தமது அழிவுக்கு வழி சமைத்துக் கொள்வதாகும் என்பதை மைத்திரிபால அறிந்திருக்கிறார்.

அதனால்தான் மஹிந்தவை சந்திப்பதற்கு முதல் நாள் அந்த சந்திப்பைப் பற்றிய அறிக்கையொன்றில் தமக்கு வாக்களித்த 63 இலட்சம் வாக்காளர்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைப்பதில்லை என ஜனாதிபதி கூறியிருந்தார். அவருக்கு வாக்களித்தவர்களில் பெரும்பான்மையினர் ஐ.தே.க ஆதரவாளர்களே. அந்த ஐ.தே.க ஆதரவாளர்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைப்பதில்லை என்றே அவர் கூறுகிறார். மறுபுறத்தில் மஹிந்தவை உள்வாங்கினால் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைக்காது என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியிருந்தார்.





ஸ்ரீ.ல.சு.க. வெற்றி பெறுவதாக இருந்தால் சிறுபான்மை மக்களின் மனதை வெல்ல வேண்டும் என கடந்த 25 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவின் மாவட்டமான ஹம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீ.ல.சு.க மாநாட்டில் உரையாற்றம் போது ஜனாதிபதியும் கூறியிருக்கிறார். உண்மையிலேயே ஸ்ரீ.ல.சு.க. எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறுவதில் பெரும் சவாலை எதிர்நோக்கும். ஏனெனில, அவர்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஐ.தே.க.வுடன் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர்.

பொதுத் தேர்தலின் போது ஐ.தே.க ஒரு பக்கமும் மைத்திரிபால மற்றொரு பக்கமுமாக நின்று போட்டியிட்டால் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்ற நிலை பல சிறுபான்மையினருக்கு ஏற்படலாம். ஆனால், ஸ்ரீ.ல.சு.க.வுக்குள் மஹிந்த உள்வாங்கப்பட்டால் அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி ஐ.தே.க.வை ஆதரிப்பார்கள். தாம் சிறுபான்மையினரிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டோம் என்பதை மஹிந்தவும் இப்போது உணர்ந்துள்ளார் போலும். எனவேதான், தாம் நோர்வே மற்றும் அமெரிக்க சதியொன்றின் காரணமாக தோல்வியடைந்ததாகவும் பொதுபலசேனாவின் மூலமே அந்த சதி நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் அண்மையில் அவர் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியிருந்தார்.

கடந்த வாரம் அவர் தம்மை ஆதரிக்கும் ஒரு சில முஸ்லிம்களை நாராஹேன்பிட்ட அபயாராமய என்ற விஹாரைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அப்போது அங்கு உரையாற்றிய ஒரு முஸ்லிம் இந் நாட்டு முஸ்லிம்கள் நன்றி கெட்டவர்கள் எனறும் கூறியிருந்தார். இவ்வாறு கூட்டம் நடத்தினாலும் இந்நாட்டு சிறுபான்மை மக்கள் அவரை இந்த விடயத்தில் நம்புவார்களா? என்பது சந்தேகமே.

ஏனெனில், அவர் சதி என்றெல்லாம் கூறிய போதிலும் அவரது ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படும் போது தாம் நடந்து கொண்ட முறை பிழையானது என்பதை அவர் எங்கும் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்ரீ.ல.சு.க.வுக்குள் பிரச்சினை இல்லாவிட்டாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மஹிந்தவை உள்வாங்க ஜனாதிபதிக்கு இடமளிப்பார்களா என்பதும் கேள்விக்குறியே. எனவே, மஹிந்த வேறு வழி பார்த்துக் கொள்ள வேண்டி வரும் என்றே தெரிகிறது. இது விமல் போன்றோர்களுக்கு சாதகமான நிலைமையாகும். ஏனெனில் மஹிந்தவை தமமோடு நேரடியாக இணைத்துக் கொண்டு மஹிந்த ஆதரவாளர்களின் வாக்குகளை தம்வசம் இழுத்துக் கொள்ள அவர்களுக்கு அதனால் வாய்ப்பு கிடைக்கும். அவர்கள் தனியாக போட்டியிட்டால் மண்ணைக் கவ்வ வேண்டியதுதான்.


-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலையில் பயங்கர கலவரம்

## 12 பொலிஸார் உட்பட 51 கைதிகள் கொலை; 200 பேர் தப்பியோட்டம்

**வடகிழக்கு ஈராக்கில் உள்ள சிறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதிகளுக்கு இடையே பயங்கர கலவரம் மூண்டது. இதில் 39 கைதிகள் உயிரிழந்தனர். இதை தடுக்க சென்ற சிறை காவலர்கள் 12 பேரை கைதிகள் அடித்துக் கொன்றனர். அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை பறித்துக் கொண்டு 200க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ளனர்.**



ஈராக்கின் வடகிழக்கே உள்ள தியாலா மாகாணத்தில் காலிஸ் சிறைச்சாலை உள்ளது. தலை நகர் பக்தாத்தில் இருந்து 50 மைல் தொலைவில் உள்ள இந்த சிறைச் சாலையில் தீவிரவாத குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட விசாரணை கைதிகள் மற்றும் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். இது தவிர வழக்கமான கொலை, கொள்ளை, திருட்டு வழக்கு தொடர்பான கைதிகளும் இருந்தனர். இந்த சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கர கலவரம் மூண்டது. கைதிகள் இருபிரிவாக பிரிந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இதில் பலர் உயிரிழந்தனர். இதை தொடர்ந்து கலவரத்தை கட்டுப்படுத்த சிறைக்காவலர்கள் குழு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களை சுற்றி வளைத்து கைதிகள் தாக்கினர். பொலிஸாரின் ஆயுதங்களை பறித்துக் கொண்டு அவர்களை திருப்பி தாக்கினர். இதில் 12 காவலர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இதை தொடர்ந்து சிறைச்சாலை கதவுகளை உடைத்துக் கொண்டு ஏராளமான கைதிகள் தப்பினர். இதில் தீவிரவாத குற்றவாளிகளும் அடங்குவர். சம்பவம் குறித்து உள்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் சாத்மான் இப்ராகிமின் கூறுகையில், 6 பொலிசார் உட்பட 30 கைதிகள் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 கைதிகள் தப்பியோடி விட்டனர். அவர்களை பிடிக்க இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது என்றார். ஆனால் கைதிகள் மோதலில் 12 பொலிஸார் உட்பட 51பேர் உயிரிழந்திருப்பதாகவும், 200க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடிவிட்டதாகவும் உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன. இந்த சம்பவம் குறித்து பேட்டி அளிக்க அதிகாரிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சிறை கலவரத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் காரணம் என கூறப்படுகிறது. சிறைச்சாலையில் 30க்கும் மேற்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் தப்பிவிட்டதாக கூறப்படுகிறது.

ஈராக்கில் சிறைக் கலவரங்கள் சாதாரண விடயமாகும். சிறையில் இருப்பவர்களை மீட்பதற்காக அடிக்கடி சிறைச்சாலை மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி கைதிகளை மீட்டுவருகின்றனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஈராக்கின் புகழ் பெற்ற அபுகாரிப் சிறையை தற் கொலை படை தீவிரவாதிகள் தாக்கினர். அப்போது 500 கைதிகள் தப்பியது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறை கலவரத்தில் வெளியில் இருந்து தீவிரவாதிகள் யாரும் தாக்கவில்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நேபாளத்துக்கு 32லட்சம் ரூபா நிதி திரட்டிய 8 வயதுச் சிறுவன்

(வோஷிங்டன்)

நேபாளத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுவதற்காக, அமெரிக்காவில் வாழும் 8 வயது சிறுவன் நிதி திரட்டினார்.

அவர் இதுவரை 26ஆயிரம் டொலர்கள் (இலங்கை மதிப்பில் சுமார் 32 இலட்சம் ரூபா) நிதி திரட்டியுள்ளார்.

அமெரிக்காவின் மேரிலாண்ட் பகுதியைச் சேர்ந்தவர் நீவ் சராஃப் (வயது8). அவரது பெற்றோர் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

நேபாளத்தில் கடந்த மாதம் 25ஆம் திகதி நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டதைக் கேள்விப்பட்ட நீவ் சராஃப், அவர்களுக்கு உதவி செய்வதற்காக நிதி திரட்ட முடிவு செய்தார்.

அதையடுத்து, அவர் தனது நண் பர்களுடன் சேர்ந்து அமெரிக்க-நேபாள மருத்துவ அறக்கட்டளையை அணுகினார்.

அறக்கட்டளை மூலமாக வலைதளப் பக்கம் ஒன்றை உருவாக்கி, நிலநடுக்கத்தில் பாதிக்கப்ப ட்டவர்களுக்கு நிதி உதவி செய்யுமாறு அவர் வலைத்தளத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதன்முலம், 32 இலட்சத்தை நீவ் சராஃப் குழுவினர் திரட்டினர். அதில், நீவ் சராஃப் தனது சொந்தச் சேமிப்பிலிருந்து அளித்த 384 டொலர்களும் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ. 50000) அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பணத்துக்காக ஒசாமா பின்லேடனை யாரும் காட்டிக் கொடுக்கவில்லை

150 கோடி ரூபா பணத்துக்காக ஒசாமா பின்லேடன் இருப்பிடம் பற்றி காட்டி கொடுக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது என அமெரிக்கா மறுத்துள்ளது.

அல்கொய்தா தீவிரவாத இயக்க தலைவரான பின்லேடன், கடந்த 2011ஆம் ஆண்டு மே 2ஆம்திகதி பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மறைவிடம் குறித்து அமெரிக்காவுக்கு தகவல் தெரிவித்ததாக பலரது பெயர்கள் கூறப்பட்டு வந்தது.




இந்த நிலையில் அமெரிக்க பத்திரிகையாளர் செய்மர் எம். ஹெர்ஷ் கடந்த ஞாயிறு அன்று வெளியிட்டுள்ள தகவலின் படி பினலேடன் பற்றிய தகவலை பாகிஸ்தானின் முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஒருவர்தான் அமெரிக்காவுக்கு தெரிவித்ததாக கூறப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் அந்த அதிகாரி அமெரிக்க உளவுத்துறை தலைவரை இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் சந்தித்துள்ளார். அப்போது அவரிடம் பின்லேடனின் தலைக்கு அமெரிக்கா அறிவித்திருந்த 25 மில்லியன் டொலர் தந்தால், பின்லேடனின் மறைவிடம் பற்றிய தகவலை தெரிவிக்கலாம் என்று கூறியுள்ளார். மேலும பின்லேடனைப் போன்ற ஒருவனை கைமாறு ஏதுவும் பெறாமல் காட்டிக்கொடுக்க முடியாது என அவர் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த செய்தியை அமெரிக்கா மறுத்துள்ளது. இதை முற்றிலும் முட்டாள்தனமான கூற்று எனவும் கூறியுள்ளது. மேலும் முன்பு சொல்லப்பட்ட இரகசிய ஆபரேசன் மூலமாகவே பின்லேடன் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மெஸடோனியாவில் துப்பாக்கிச் சண்டை



## 8 பொலிஸார், 14 கிளர்ச்சியாளர்கள் பலி

மெஸடோனியா நாட்டில் பொலிஸாருக்கும், தடை செய்யப்பட்ட கிளர்ச்சிக் குழுவினருக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 8 பொலிஸார், 14 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது, கொஸாவோ விடுதலைப் படை" அமைப்பைச் சேர்ந்தவர்களைப் பிடிக்கச் சென்ற பொலிஸாருக்கும், அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கும் கடந்த சனிக்கிழமை துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வரை நீடித்த அந்தச் சண்டையில் 14 பொலிஸார் உயிரிழந்தனர். 37 பொலிஸார் காயமடைந்தனர்.

அந்த இடத்திலிருந்து 14 கிளர்ச்சியாளர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

கும்பலைச் சேர்ந்த 30 பேர் சரணடைந்தனர்.

அந்தப் பகுதியிலிருந்து ஏராளமான ஆயுதங்களும், வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செர்பியாவிடமிருந்து கொஸாவோ முழு விடுதலை பெறுவதற்காக 1998-1999ஆம் ஆண்டுகளில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கொஸாவோ விடுதலைப் படை தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.


மெஸடோனியாவில் பயங்கரவாதச் செயல்களை மேற்கொள்வதற்காக அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் நுழைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரிய விதிமுறைகளைப் பின்பற்றியே

## அரசியல்வாதிகளுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



(கொழும்பு)

உரிய விதிமுறைகளைப் பின்பற்றியே அரசியல்வாதிகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதனை எதிர்க்கவில்லை.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான விசாரணைகளில் உரிய விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சில காரணங்களுக்காக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைப்பது சரியாகாது.

சில சிவில் வழக்குகள், குற்றவியல் வழக்குகளாக மாற்றமடைந்துள்ளன.

இந்த நிலைமை அரசியல் வேட்டையாகவே கருதப்பட வேண்டும்.


நாட்டு மக்களின் ஆணையை மாற்றியமைக்க இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் முடியாது.

ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் அவை நிரூபிக்கப்படவில்லை.

கட்சிக்குள் பிளவுகள் இருந்தாலும் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்கின்றார்கள் என நிமால் சிறிபால டி சில்வா சிங்களப் பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்துள்ளார். (இ-5)

# அளித்த வாக்குறுதிகளின் படி 19 நிறைவேற்றப்படவில்லை

### திஸ்ஸ குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**19ஆம் திருத்தச் சட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் 19ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

19ஆம் திருத்தச் சட்டத்தில் நல்ல மற்றும் தீய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் புதிய அரசாங்கம் பிரசாரம் செய்ததை போன்று மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படுகின்றமை ஓர் சிறப்பான விடயமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தன்னை மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் அழைப்பு விடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் இறுதி நேரத்தில் மகிந்த அரசாங்கத்தில் இணைந்து கொள்ள எடுத்த தீர்மானம் வாழ்க்கையில் நான் செய்த மிகப்பெரிய தவறாகவே கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்காமை மற்றும் பதவிகள் கிடைக்காமை குறித்து ஒருபோதும் கவலைப்பட்டதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## விமானப் பயணத்தின் போது உறக்கத்தில் ஆழ்ந்த விமானி

### விசாரணைக்கு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் குறைந்த கட்டண விமான சேவையான மிஹின் லங்காவின் விமானியொருவர் நடுவானில் வைத்து தமது கடமையை மறந்து உறங்கிய சம்பவம் வெளியாகியுள்ளது.

கடந்த மே முதலாம் திகதியன்று சார்ஜாவில் இருந்து கொழும்பை நோக்கி வந்த எம்ஜே 408 மிஹின் லங்கா விமானத்திலேயே இந்தியரான கப்டன் வாஹ் என்பவர் சுமார் 20நிமிடங்கள்வரை உறக்கம்கொண்டதாக முறையிடப்பட்டுள்ளது.

மும்பையை சேர்ந்த இவர், வழமையாக இடியோசையின்போதும் உறங்கக் கூடியவர் என்ற சாதனையை கொண்டுள்ளார்.

எனினும் அவர் தொடர்ந்தும் மிஹின் லங்கா விமானியாக பணியாற்றி வருகிறார். மே முதலாம் திகதியன்று அவர் தமது விமானி அறையை பூட்டிய பின்னர் கடும் நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்.

இதன்போது விமானத்தை செலுத்தி வந்த முதல் அலுவலரான சுபீர் லாபீர் மற்றும் ஒரு முதல் அலுவலரின் உதவியுடன் அவசர கதவின் ஊடாக சென்று வாஹ்வை எழுப்பியுள்ளனர்.

இந்தநிலையில் இது குறித்து லாபீர் விமான நிறுவன அதிகாரிகளுக்கு முறையிடவில்லை. எனினும் அவருக்கு உதவியாகச் சென்ற அதிகாரியே முறைப்பாடு செய்துள்ளார்.

வாஹ்வுக்கு உரிய ஓய்வு கொடுககப்படாமையே அவர் நித்திரை கொண்டமைக்கான காரணம் என்று கூறப்பட்டாலும் அவர் வழமையாக பயணங்களின் போது நித்திரை கொள்பவர் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நாட்டில் தோல்வி கண்ட அரசியல் தலைவர்கள் மிலிபான்டை உதாரணமாக கொள்ளவேண்டும்

பிரிட்டனில் தொழில் கட்சித் தலைவர் எட் மிலிபான்ட் தேர்தலில் தோல்விகண்டு பதவி விலகினார். இதனை எமது நாட்டில் தோல்வி கண்ட தலைவர்களும் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முரண்பாடுகள் களையப்படாவிட்டால் அக்கட்சி அழிந்து விடுமெனவும் ஐ. தே.கட்சி ஆட்சி அமைக்கும என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே சம்பிக்க ரணவக்க இதனை தெரிவித்தார். அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வி கண்டும் ஒதுங்கியிருக்காது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளார். இன்று அக் கட்சி இரு அணிகளாக செயற்படுகின்றது.

இது தொடருமானால் சுதந்திரக் கட்சி அழிந்து விடும். எனவே அதனை பாதுகாக்க அக்கட்சியினரே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சுதந்திரக்கட்சிக்குள் இவ்வாறானதொரு குழப்பம் காரணமாகவே 1977 இல் ஐ.தே.கட்சி ஆட்சி ஏற்படுத்தப்பட்டு அது17 ஆண்டுகள் தொடர்ந்தது. இன்றும் அதே நிலைமை சுதந்திரக் கட்சிக்குள் தலைத்தூக்கியுள்ளது. இது ஐ.தே.கட்சிக்கே சாதகமாக அமையும்.

எதிர்காலத்தில் அதிக பெரும்பானமையுடன் ஐ.தே. கட்சி ஆட்சி அமைக்கும் நிலைமையும் ஏற்படலாம். பிரிட்டிஷ்காரரை அனைத்திற்கும் நாம் உதாரணமாக எடுத்துக கொள்ளவிட்டாலும் அண்மையில் நடைபெற்ற பிரிட்டன் தேர்தலில் தோல்வி கண்ட தொழிற்சங்க கட்சி தலைவர் மிலிபான் தோல்வியை ஏற்றுக் கொண்டு தனது பதவியை இராஜினாமா செய்து விலகி விட்டார். எனவே எமது நாட்டில் தோல்வி கண்ட தலைவர்களும் மிலிபான்டை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேணடும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (இ-5)

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதில்லை

### டிலான் பெரேரா தெரிவிப்பு

அண்மையில் குருணாகலில் நடைபெற்ற மகிந்தவுக்கு ஆதரவான கூட்டத்தில் பங்கேற்றவர்ளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் நோக்கில் இந்தக் கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பது குறித்து தீர்மானிக்கவில்லை என டிலான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று குருணாகல் கூட்டத்தில் பங்கேற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்ற சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**நாகலிங்கம் ஞானசம்பந்தன்**

(ஓய்வுநிலை காணிப்பதிவாளர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஞானசம்பந்தன் கட ந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி மாணிக்கஜோதி இமானுவல் மேரிதிரேஷா**

(இளைப்பாறிய தலைமை ஆசிரியை)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் கனடா Ottawa ஐ வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கஜோதி இமானுவல் மேரிதிரேஷா கடந்த 7ஆம்திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது திருப்பலி எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல்2037 McGee Side Road,Ottawa,ON,KOA ILO இல் அமைந்துள்ள Highland Park Cemetery என்னும்முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



**பாலசுந்தரம் சிவானந்தசுந்தரம்**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சிவானந்தசுந்தரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் கிரியைகள் இன்று பி.ப.5 மணி தொடக்கம் 9 மணி வரை Elgin Mills Crematorium and Visitation Centre,1591 Elgin Mills Rd E,Richmond Hill,ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா விடுதலை திரைப்படத்துறை வாழ்த்து

(சென்னை)

தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தென்னிந்திய நடிகர சங்கம், தமிழ்நாடு இயக்குநர் சங்கம், தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனம் உள்ளிட்ட தமிழ்த் திரைப்பட அமைப்புகள் நேற்று முன்தினம் கூட்டாக அறிகை வெளியிட்டுள்ளனர். அதில் கூறியிருப்பதாவது,

சாதனைகள் பல கடந்து, நீதியை நிலைநிறுத்தி, வரலாற்றில் சாதித்துக்காட்டிய அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதாவுக்கு கிடைத்துள்ள வெற்றி, தமிழ்த் திரையுலகை மட்டுமல்லாமல் உலக தமிழர்களின் ஒட்டுமொத்த வெற்றி. மீண்டும் தமிழ்நாட்டின் முதல்வராய் ஜெயலலிதா அரியணையில் அமர்ந்து தமிழ்நாட்டுக்கும், உலக தமிழினத்துக்கும் சலுகைகள் பல வழங்க வேண்டுகிறோம. வருங்காலத்தில் தமிழ்நாடும், உலக தமிழினமும் உங்கள் அன்பிற்கு ஆதரவாய் அணிவகுத்து நிற்கும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பயணிகள் ரயிலில் குண்டு வெடித்தது

கொல்கத்தாவில் பயணிகள் புகையிரதத்தில் நேற்று அதிகாலை நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 18 பேர் காயமடைந்தனர்.

திட்டாகர் 24 பர்கானா மாவட்டம் அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. முதற்கட்ட விசாரணையில், கோஷ்டி பூசல் காரணமாக இச் சம்பவம் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது என புகையிரத மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது. (இ-5)

காந்தியின் கொள்ளுப் பேரன் மீது

# வழக்குப் பதிவு

ஜலந்தர் சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் மீது அவதூறான விமர்சனம் செய்ததற்காக காந்தியின் கொள்ளுப் பேரன் துஷார் காந்தி மீது பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஜலந்தர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அண்மையில் செய்தியாளர்களிடையே துஷார் காந்தி பேசும்போது, இந்திய சுதந்திர போராட்ட வீரர் பகத்சிங், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு ஒரு குற்றவாளியாக இருந்தார். அதனால் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைப்பதற்கு காந்தி எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று கூறியிருந்தார். இவரது கருத்துக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து ஜன் ஜக்ரிதி மன்ச் எனும் தொண்டு நிறுவனம் ஒன்று துஷார் காந்தி மீது பொலிஸில் புகார் அளித்தது. அதன் பேரில் துஷார் காந்தி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 295 ஏ-வின் கீழ் ஜலந்தர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ-5)

# மீனவர்கள் நலனுக்கெதிராக மோடி அரசு செயற்படுகிறது


## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

(டில்லி)

**மீனவர்களின் நலன்களுக்கு எதிராக நரேந்திர மோடி அரசு செயல்படுகிறது என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றத்துக்கு வெளியில் நேற்றுமுன்தினம் ராகுல் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கடலில் மீன்பிடி தடைக் காலத்தை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.

மேலும் இந்திய மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில், வெளிநாட்டு படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி தரப்பட்டுள்ளது. கடலோர மாநிலங்களில் இது மிக முக்கிய பிரச்சினையாகும்.



வழக்கம்போல் விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் நலனுக்கு விரோதமாக மத்திய அரசு செயற்படுகிறது. விவசாயிகளுக்கு மட்டுமல்ல நாட்டில் நலிவடைந்த ஒவ்வொருக்கும் இந்த அரசு தீங்கு விளைவிக்கிறது. வரிவிதிப்பு மூலம் நலிவடைந்த மக்களை அரசு கசக்கிப் பிழிகிறது.

மீன்பிடித் தடையால் அனைத்து கடலோர மாநிலங்களில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். இத்தடையை மத்திய அரசு திரும்பப் பெறவேண்டும்" என்றார்.

ராகுல் காந்தியின் இந்தக் குற்றச்சாட்டை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, "இந்தக் குற்றச்சாட்டு தவறானது.

அதுபோன்ற ஒரு முடிவை (மீன்பிடிக்கத் தடை) அரசு எடுக்கவில்லை. வெளிநாட்டுப் படகுகளுக்கு அரசு அனுமதி வழங்கவில்லை. வெளிநாட்டுப் படகுகள் வந்ததாக எந்த சம்பவமோ அல்லது புகாரோ எனது அமைச்சகத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்படவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பொதுப்பணித்துறையின் பொறியியலாளர் கைது!

0

பாலம் கட்ட அனுமதி வழங்க 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய பொதுப்பணித்துறை பொறியியலாளர் நேற்று கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

நெல்லை மாவட்டம் பாவூர் சத்திரம் அருகே உள்ள கீழப்பாவூர் யூனியன் வீதியை சேர்ந்தவர் பொற்செழியன். அவருக்கு வயது 54, இவர் பொதுப்பணித்துறையில் சிற்றாறு பாசன திட்ட இளநிலை பொறியியலாளராக உள்ளார்.

இவரது அலுவலகம் தென்காசியில் உள்ளது. சிற்றாற்றின் குறுக்கே சேர்ந்த மரத்தில் பொதுமக்கள் நிதி சேகரித்து பாலம் கட்ட முடிவு செய்தனர்.

அதற்காக அதே பகுதியை சேர்ந்த அமல்ராஜ் என்பவர் தடையில்லா சான்று கேட்டு தென்காசியில் உள்ள சிற்றாறு திட்ட இளநிலை பொறியியலாளர் பொற்செழியனை அணுகினார். அப்போது பொற்செழியன பாலம் கட்ட தடையில்லா சான்று வழங்க ஒன்றரை இலட்சம் ரூபா இலஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, முதலில் 50 ஆயிரம் ரூபா தருவதாக அமல்ராஜ் கூறியுள்ளார். இதற்கிடையே அமல்ராஜ் நெல்லை இலஞ்ச ஒழிப்பு பொலிஸாரிடம் புகார் செய்தார்.

இதைத்தொடர்ந்து பொலிஸார் பொறியியலாளர் பொற்செழியனை கையும் களவுமாக பிடிக்க முடிவு செய்தனர். அதன்படி அமல் ராஜிடம் இரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டுகளை கொடுத்து அனுப்பினர்.

அவர் பொற்செழியன் அலுவலகத்திற்கு பணத்தை கொடுத்தார். அப்போது அங்கு மறைந்திருந்த பொலிஸார் பொற்செழியனை கைது செய்தனர்.

பின்னர் அவரை தென்காசி நீதிமன்றத்தில் நீதிபதி முன் ஆஜர்படுத்தினர். நீதிபதி அவரை 15 நாட்கள் காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து பொலிஸார் அவரை பாளையங் கோட்டை சிறையில் அடைத்தனர். (இ-5)

# பிரதமர் நரேந்திர மோடி ஜெயாவுக்கு வாழ்த்து

முன்னாள் தமிழக முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. கர்நாடக உயர் நீதிமன்றம் ஜெயலலிதா குற்றமற்றவர் என்று தீர்ப்பு வழங்கியது.

அதில், ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்வதாகவும், அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் தெரிவித்திருந்தது.

இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி, ஜெயலலிதாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அதேபோல், தமிழக ஆளுநர் கே.ரோசய்யா ஜெயலலிதாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு, பூங்கொத்து ஒன்றையும் அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி

# ஜெயா முதல்வரானால் மீண்டும் இராஜினாமா

## சுவாமி விடாப்பிடி

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் உச்சநீதிமன்றில் மேல்முறையீடு செய்வேன் என்றும் ஜெயலலிதா முதலமைச்சரானால் மீண்டும் இராஜினாமா செய்ய வேண்டி வருமென்றும் பாரதீய ஜனதா மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி டுவிட்டரில் தெரிவித்துள்ளார். சொத்துக் குவிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அ. தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் கர்நாடக நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை நீதிபதி குமாரசாமி விசாரித்தார்.

இந்த வழக்கில நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்புக் கூறிய நீதிபதி குமாரசாமி ஜெயலலிதாவுக்கு தனி நீதிமன்று 4 ஆண்டு சிறைத் தண்டனையும் 100 கோடி ரூபா அபராதமும் விதித்து வழங்கிய தீர்ப்பை இரத்துச் செய்து அவரை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இதேபோல் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டு சிறைத் தண்டனையும் தலா 10 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதை இரத்துச் செய்து அவர்களையும் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இந்நிலையில் சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வேன் என்று பாரதீய ஜனதா மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி டுவிட்டரில் தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வேன். கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் கணக்கீடு செய்வதில் தவறு உள்ளது என்பதை நிரூபிப்பேன். ஜெயலலிதா முதலமைச்சர் ஆனால மண்டும் இராஜினாமா செய்ய வேண்டி இருக்கும் என்று சுப்பிரமணியன் சுவாமி டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி-1)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரி, ஆனைவிழுந்தான், சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடும்பம் குடும்பமாக இணைந்து சட்டவிரோத கசிப்பு உற்பத்தி,வியாபாரம், குடித்தல் ஆகியவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.**



இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10மணியளவில் கிளி/ வன்னேரிக்குளம் மகா வித்தியாலய முன்றிலில் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி பதாகைகளை தாங்கியவாறு ஆரம்பமாகி, ஆனைவிழுந்தான் சந்தியில் முடிவுபெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் கசிப்பு உற்பத்தியாளர்களே! எமது கிராமமக்களின் கௌரவத்தை கலங்கப்படுத்தாதீர்கள், நீங்கள் உங்கள் குடும்பங்களை சிதைத்து ஏனைய குடும்பங்களையும் சிதைக்காதீர்கள், குடி குடியைக் கெடுக்கும், கசிப்பை ஒழிக்க பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம், கசிப்பு காய்ச்சினால மக்களினால் தண்டனை வழங்கப்படும்,கசிப்பு காய்ச்சுவோரை கிராமத்தில் இருந்து ஒதுக்குவோம், நாங்கள் எவரும் இனி கசிப்பு அருந்தவே மாட்டோம் ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறு கலந்து கொண்டனர்.

அத்துடன் அண்மையில் கசிப்பு வியாபாரத்தினால் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் கொலையாளிகளுக்கு தண்டனை வழங்கக்கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் கோஷம் எழுப்பப்பட்டது.

வன்னேரி,ஆனைவிழுந்தான், சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி, வன்னேரிக்குளம் சோலைக்காட்டுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டமைக்கு கசிப்பு உற்பத்தியே காரணம் என கிளிநொச்சி பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரன், தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், வன்னேரிக்குளம் சோலைக்காட்டுப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நா.பரமேஸ்வரன் (வயது 43) என்பவர் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்டு இரண்டு சந்தேகநபர்களை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினோம். இந்தக் கொலை தொடர்பில் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் இதற்கு முழுமையான காரணம் கசிப்பு உற்பத்தியே என்பது தெரியவந்தது. கொலை செய்யப்பட்டவரும் பிறிதொரு நபரும் இணைந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்தவருக்கு பங்காளியின் மனைவியுடன் தொடர்பு இருந்துள்ளது.



இதன் விளைவாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. சட்டவிரோத உற்பத்திகள் மூலம் கிளிநொச்சியில் குற்றச்செயல்கள், கொலைகள், குடும்பப்பிணக்குகள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழுவை செயற்படுத்துகின்றோம். கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களை அடையாளப்படுத்த மோப்ப நாய்களைப் பயன்படுத்துகின்றோம். சுண்டிக்குளம், பிரமந்தனாறு பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகளுக்கும் சட்டவிரோத மதுபான உற்பத்திகளே காரணம். மக்களிடையே இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்றார். (2-277)




## குடும்ப விபரங்கள் திரட்டு மக்கள் மத்தியில் அச்சநிலை

### குழப்பமடைய தேவையில்லை என்றார் வவு.பிர.செயலாளர்

முள்ளிவாய்க்கால் நினைவு நாள நெருங்கும் வேளையில் வவுனியாவில் வீடுவீடாகச் சென்று விபரங்கள திரட்டப்படுவதுடன் புகைப்படங்களும் எடுக்கப்படுவதால அச்சநிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது,

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடுகளுக்கு வருகின்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இங்கு வசிக்கும் குடும்பங்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதுடன் தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணப் பதிவுச் சான்றிதழ், காணி உறுதி, கல்வித் தகைமை, காணாமல் போனோர் விபரம், யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் விபரம், வெளிநாடுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் விபரம் உள்ளிட்ட பல்வேறு விபரங்களை கோருவதுடன் அவற்றின் பிரதிகளையும் பெற்றுச் செல்கின்றனர். இவற்றுடன் வீடுகளை புகைப்படங்களும் பிடித்துச் செல்கின்றனர்.

யுத்த காலங்களில் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் இவவாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நெருங்கும் வேளையில் இவ்வாறான பதிவுகளை மேற்கொள்வது ஏன் என்ற ஒரு அச்சத்தையும், சந்தேகத்தையும ஏற்படுத்தியுள்ளது என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவிடம் தொடர்பு கொண்டு வினவியபோது,

பிரதேச செயலக பதிவுகளை சரியான முறையில் பேணுவதற்கும் அவற்றை கணணி மயப்படுத்துவதற்காகவும் புதிய விபரங்கள் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் எமது பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுடைய விபரங்களை முழுமையாக ஆவணப்படுத்தும் நோக்கிலும் தேவை ஏற்படுகின்ற போது இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் இப் புதிய பதிவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது பிரிவுக்குட்பட்ட இறம்பைக்குளம், ஈச்சங்குளம், சாஸ்திரிகூளாங்குளம், ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இதன் முற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் ஆவணங்களை பிரதேச செயலகம் தமது தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தும், இது தொடர்பில் மக்கள் அச்சமோ அல்லது குழப்பமோ அடையத்தேவையில்லை பதிவு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். [illegible]

## வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை சுற்றியுள்ள பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துக

### இந்திய துணைத்தூதுவருக்கு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய அபிவிருத்திக்கு முடிந்தளவு உதவிகளை வழங்குவதற்கு ஆவன செய்வதாக இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜா உறுதியளித்துள்ளார். இந்திய துணைத்தூதர் தலைமையிலான குழு, வரல ற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்திருந்தனர்.

ஆலயபரிபாலன சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆலயத்துக்கு சென்ற குழுவினர் ஆலயத்தில் நடைபெறும் அபிவிருத்தி பணிகளை பார்வையிட்டதுடன் நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டனர். [illegible] பெற்ற [illegible] அபிவிருத்தி



தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் இந்திய துணைத்தூதரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். "வரலாற்று சிறப்புமிக்க இந்த ஆலயமானது நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். ஆலயத்தின் புனரமைப்புக்கு இந்திய அரசின் உதவியையும் ஆலோசனையையும் எதிர்பார்க்கின்றோம். ஆலயத்தை சூழவுள்ள ஒரு மைல் சுற்றளவு பகுதியை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள்வி டுத்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், இந்திய துணை த்தூதர் ஆ.நடராஜா, ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கௌவும். தர்மம் மறுபடியும் வெல்லும்.
- பாரதியார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பராதி என்றால் மகிழ்வு நிரபராதி என்றால் ஆத்திரமோ!

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுக்களை கர்நாடக சிறப்பு மேல் நீதிமன்றம் நிராகரித்து அவரை விடுதலை செய்துள்ளது.

முன்னதாக தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டு வழக்கு கர்நாடக நீதிமன்றத்தில் நடந்த போது, ஜெயலலிதா குற்றவாளியாக அறிவிக்கப்பட்டதுடன் முதலமைச்சர் உள்ளிட்ட பதவிகள் பறிக்கப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார். கூடவே பத்து ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்க முடியாது என்ற தீர்ப்பும் அறிவிக்கப்பட்டது.

கர்நாடக கீழ் நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பு தமிழகம் என்ற எல்லை தாண்டி, ஏனைய மாநிலங்களிலும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சட்ட சபைத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டி முதலமைச்சராகிய செல்வி ஜெயலலிதாவுக்கு இக்கதியோ! என்று தமிழக மக்கள் அழுது புலம்பினர். ஈழத்தமிழர்களும் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக் கண்டு இதயத்தால் வெம்பினர்.

இருந்தும் ஜெயலலிதா மீது கோபம் கொண்டவர்கள் மட்டும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர். நேற்றுத் தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா இன்று சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் நிலைமை எப்படி இருக்கும்?

எனினும் ஜெயலலிதா பொறுமையைக் கடைப்பிடித்ததுடன் தமிழக மக்களையும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

நீதிமன்றத் தீர்ப்புக் கண்டு ஆத்திரம் கொள்ளாமல் மிகவும் நிதானத்தைக் கடைப்பிடித்ததன் காரணமாக செல்வி ஜெயலலிதா மீண்டும் முதல்வராகும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆம், தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கர்நாடகச் சிறப்பு மேல் நீதிமன்றில் மேல்முறையீடு செய்தார்.

ஜெயலலிதாவின் மேன்முறையீட்டை ஆராய்ந்த நீதிமன்றம் செல்வி ஜெயலலிதாவை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிப்புச் செய்ததுடன், கர்நாடக கீழ் நீதிமன்றம் பிழையான தீர்ப்பை வழங்கி உள்ளது என்றும் குறித்துரைத்துள்ளது.

கர்நாடக சிறப்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பால் தமிழகம் குளிர்ந்து போயுள்ளது. முன்னைய தீர்ப்பால் நெருப்பாய் எரிந்த தமிழக மக்களின் மனங்கள் பின்னைய தீர்ப்பால் வெம்மை தணிந்து வெற்றி என்று ஆர்ப்பரித்தன.

அதேவேளை முன்னைய தீர்ப்பால் குளிர்ந்த இதயங்கள் மேல் நீதிமன்றத் தீர்ப்பால் அதிர்ந்து போய் உள்ளன.

முன்னைய நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக் கொண்டால் பின்னைய நீதிமன்றத் தீர்ப்பையும் மௌனமாக ஏற்றுக் கொள்வதே தார்மீகக் கடமையாகும். இதைவிடுத்து ஜெயலலிதா **பராதி** என்றால் மகிழ்வடைவதும் **நிரபராதி** என்றால் ஆத்திரம் அடைவதும் எந்த வகையில் நியாயமாகும்?

எதுவாயினும் செல்வி ஜெயலலிதாவுக்கு கிடைத்த விடுதலை தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா நீண்ட காலம் இருப்பார் என்பதற்கு கட்டியம் கூறுவதாக உள்ளது.

அதேநேரம் கர்நாடக நீதிமன்றத் தீர்ப்பால் செல்வி ஜெயலலிதா முதல்வர் பதவியை இழந்து, சிறையில் அடைபட்ட போது சம்பிரதாயத்துக்கேனும் கவலை வெளியிடுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பலரும் கேட்ட போதும் அம்மா இனி வரார் என்ற நினைப்பில் பேசாதிருந்த கூட்டமைப்பினர் எதிர்காலத்தில் ஜெயலலிதாவைச் சந்திப்பது சாத்தியமாகுமா? என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

## மைத்திரிபால அரசுமீது நம்பிக்கையிழந்த சரத்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் மூலம் எதனையும் செய்துகொள்ள முடியவில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி ஏற்பாட்டாளரே இவ்வாறான ஒரு விடயத்தை தன்னிடம் குறிப்பிட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகா அண்மையில் அம்பலங்கொட நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது தற்போதைய அரசாங்கம் பாரிய மோசடிக்காரர் களை கைது செய்து நல்லாட்சிக்கு எதிராக செயற்படுவதாக தெரிவித்தார்.

திருடர், மோசடிக்காரர்களை விரட்டுவதற்கு பிரதான கட்சிகள் இரண்டிற்கு அவசியம் ஒன்றும் இல்லை எனவும், திருடர்களுடன் செயற்படுகின்ற அரசாங்கம் குறித்து மக்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டுள்ளதாகவும் அவர மேலும் தெரிவித்துள்ளார. (இ-5)

## ஆறுதல் அரங்கில் தயா சோமசுந்தரம்

(யாழ்ப்பாணம்)

**கருத்தூண்டல் களம்** அமைப்பின ஏற்பாட்டில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வைமன் வீதியில் உள்ள ஆறுதல் அமைப்பின் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் பேராசிரியர் தயா சோமசுந்தரம் **இளைஞர்களின் எதிர்காலம்** என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

அதைத் தொடர்ந்து அவ் விடயத்தை ஒட்டி நிபுணத்துவக் கலந்துரையாடல் இடம்பெறும். (செ)

## போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 20 ஆயிரம் பேர் கைது

போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 20 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நேற்றைய தினம் வரையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 21 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஹெரோயின் தொகையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 9185 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 2693 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதைப் பொருளும் அதனுடன் தொட ர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 18,767 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெலே சுதாவுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக ருவான் தெரிவித்துள்ளார். (செ-11)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

மூளாய்ப் பகுதியில் உள்ள காளி கோவில் முன் வீதி சுமார் 50 வருடங்களாக திருத்தப்படாத நிலையில் உள்ளது. இப்பகுதியில் வசிக்கின்ற சுமார் 56 குடும்பங் களும் அயல் கிராம மக்களும் இவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் அறநெறிப் பாடசாலை,முறிவு நெறிவு வைத்திய சாலை, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள்,விளையாட்டுக்கழகம், நூல் நிலையம் என்பன அமைந்துள்ளன.

எனவே பொதுமக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவன ங்கள் அமைந்துள்ளமேற்படி பகுதி வீதியை இயன்றவரை விரைவாகப் புனரமைத்து பொது மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு உதவி செய்து தருமாறு மூளாய் ஒளி சனசமூக நிலையம் ஊடாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## பொலிஸ் பொறுப்பதிகாரியாக திசநாயக்க நியமனம்

நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டி.எம்.ஐ.கே. திசநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை அவர் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

32 வருடங்கள் பொலிஸ் சேவையில் அனுபவம் கொண்ட திசநாயக்க 9 பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்.

இதேவேளை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய சுமித் பெரேரா தலைமன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-3-60)

## கலந்துரையாடல்

நாட்பட்ட சிறுநீரக நோய் (தோற்றுவாய் அற்றது) பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை யாழ்.முகாமையாளர் சம்மேளனம் இலங்கை பொறியியலாளர் சங்கம் வடபிராந்தியமும் மற்றும் நல்லூர் லயன்ஸ் கழகமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

இக்கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் வளவாளர்களாக யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி ஆர்.சுரேந்திரகுமார், ராஜரட்டைப் பல்கலைக் கழக ஆய்வாளர் வைத்திய கலாநிதி சன்ன ஜயசுமன ஆகியோர் உரையாற்ற வுள்ளனர்.ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3)

## கடமைகளை நிறைவேற்றுவதற்கு திறைசேரியிடம் போதிய நிதி உண்டு!

### நிதியமைச்சர் ரவி விளக்கம்

(கொழும்பு)

திறைசேரியிடம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற நிதியிருப்பதாக தெரிவித்துள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, உரிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியை வழங்கும் பலமும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசாங்கத்தின் நிதிநிலை குறித்து தெரிவித்திருந்த கருத்துகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசாங்கம் ஆட்சி பொறுப்பையேற்ற வேளை திறைசேரியில் காணப்பட்ட நிலை குறித்து கருத்து தெரிவித்திருப்பார் என்றே நான் கருதுகிறேன்,

அதேவேளை முன்னைய அரசாங்கம உட்கட்டமைப்பு திட்டங்களை கையாண்ட விதம் மற்றும், அவர்களால் வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் திறைசேரியை பாதித்துள்ளன. அதேவேளை நல்லாட்சி அரசாங்கம் காரணமாக நாட்டில் காணப்படும் சூழல் வெளிநாட்டு முதலீடுகளையும்,சர்வதேச நிதியமைப்புகளையும் கவர்ந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஸ்ரீ ஸ்ரீ.ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இது ஒரு புதுப் பயிற்சியைத் தொடங்குகிறது



ஞானம் என்பது நிகழ்விற்கு அப்பாற்பட்டது. ஒவ்வொரு நிகழ்வும் எப்படியாவது உங்களுடைய விழிப புணர்விற்கு வண்ணமூட்டுகிறது. இன்பம், துன்பம், துயரம், கோபம், பொறாமை என ஒவ்வொரு நிகழ்வும், யதார்த்தத்தைப் பற்றி உங்களுக்குத் தவறான கருத்தை அளிக்கிறது. குறிப்பிட்ட நிகழ்வுகளின் வண்ணங்களுக்கு அப்பால் உண்மை உள்ளது.

ஒவ்வொரு பொருளுக்கும் பின்னால் இருப்பது அனந்தம் - முடிவில்லாதது. பொருள்கள் வரையறைக்குட்பட்டவை. மாறும்தன்மையுடையவை, ஆனாலும் அவை என்றும் மாறாத எல்லையற்ற அண்டவெளியில் உள்ளன. எந்தப் பொருளையும் அதன் அணுக்களாகப் பிரித்துக் கொண்டு செல். அதில் உள்ள ஒவ்வொரு அணுவைச் சுற்றியும் அண்டை வெளி உள்ளதைக் காண் பீர்கள். எல்லாப் பொருள்களுக்கும் அப்பால் இருப்பது அனந்தம்.

ஒவ்வொரு மனிதனுக்கு அப்பால் இருப்பது அன்பு, மனிதனின் தனித்தன்மை, உடல், மனம், நடத்தை அனைத்தும் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கின்றன, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அப்பால் இருப்பது மாறாத அன்பு, நீங்கள்தான் அன்பு. நீ எப்போது உன்னை இழக்கின்றாயோ அப்போது உன்னை அறிவாய்.

ஒரு நிகழ்வுக்குப் பின்னால் இருக்கும் நிகழ்வு ஞானம். ஒரு பொருளுக்கு அப்பால் இருக்கும் பொருள் எல்லையற்றது, ஒரு மனிதனுக்கு அப்பால் இருக்கும் மனிதன் அன்பின் உருவம்.

ஒரு நிகழ்வில், ஒருவரின் தனித்தன்மையில் அல்லது ஒரு பொருளில் சிக்கிக் கொள்வதுதான் மாயை. பிரம்மம என்பது தெய்வீக மெய்யுணர்வு-இவை எல்லாவற்றையும் கடந்தது. பார்த்தீர்களா? ஒரு சிறிய மாற்றந்தான்.

**(வாழும் கலை நிறுவுனர் பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ.ரவிசங்கர் சுவாமிகளின் ஜனனதினம் இன்றாகும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி**




பெயர்கள் இடமிருந்துவலம்
இருப்பவர்:
திருமதி. ஜெ.சரவணபவஜயர் (முகாமையாளர்), த.அபிதா (தலைவர்), திரு.க.கணேசநாதன் (பணிப்பாளர்), ந. சங்கீதவாணி, செல்வி. சு.சிதம்பரநாதன் (பயிற்றுவிப்பாளர்)
நிற்பவர்:
மா.தேவிசாந்தினி, சி.சாரங்கி, ம.யதுரிக்கா, டீபனி விஜயசிங்க, பிரசாதி ராஜபக்ஷ,

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி**




பெயர்கள் இடமிருந்துவலம்
இருப்பவர்:
திருமதி. என்.சஞ்சீவன்,திரு.வி.சேந்தன், (உப அதிபர்), திரு. கே.இரத்னகுமார் (அதிபர்), எஸ்.சிந்துஜா (தலைவர்),செல்வி. ஜே. செந்திவேல் (பிரதி அதிபர்) திருமதி. பி.சத்தியசீலன் (பயிற்றுவிப்பாளர்),
நிற்பவா் : எம்.சங்கீதா, எம்.சுதர்சினி, எஸ். கஜானி, எம்.தனுஜா, கே.கம்சாஜினி, எஸ்.நிக்ஷானா, எஸ்.குயிஸ்ரலா.

**யாழ். இந்துக்கல்லூரி அணி**



பெயர்கள் இடமிருந்துவலம் இருப்பவர்:
திரு. பரமேஸ்வரன் (பிரதி அதிபர்), திரு.எஸ்.நிமலன் (பிரதி அதிபர்), திரு.ஐ.தயானந்தராஜா (அதிபர்), திரு. கே.கே.வாசவன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), செல்வி. எஸ்.லாவண்யா (பொறுப்பாசிரியர்)
நிற்பவர்:
எம்.ஆகாஷ், ஐ.சிவலக்சன், ஜி.செந்தூரன்,கே. கஜவதனன், வி.நிக்ஷோதன்

**ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி**



பெயர்கள், இடமிருந்து வலம்
இருப்பவர்:
திரு.நா.திலகராஜ் (ஆசிரியர்), திருமதி. ந.சந்திரகுமார் (அதிபர்)
நிற்பவர்:
கே.சரத்குமார், ம.ராஜ்குமார், செ.ஹரிப்பிரகாஸ், கி.துஸ்யந்தன், யெ.விதுசன், யே.கேசவன், யெ.யெசிகரன், ச.நிறோயன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட, அழைக் கப்பட்ட மேசைப்பந்தாட்ட கழக அணிகளுக்கிடையில் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

உடற்கல்வி அலகு பணிப்பாளர் க.கணேச நாதன் தலைமையில் நடைபெறும் இந்த மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பெண்கள் பிரிவில் யாழப் பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி யும் ஆணகள் பிரிவில் யாழ். இந்து கல்லூரி அணியை எதிர்த்து ஆனைக கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி யும் மோதவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ்.இந்துக்கல்லூரியின் ஆசிரியரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள மேசைப்பந்தாட்ட அ[illegible] யின் தலைவருமாகிய பி.விமல நாதன் கலந்துகொள்கின்றார். (க)

# சென்.பற்றிக்ஸ் வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்திவரும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போட்டியொன் றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டி யில் சென்.பற்றிக்ஸ் அணியும் சென். ஜோன்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் அணி, 50 ஓவர்கள் நிறை வில் 8 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப்பெற்றது. பி.கஸ்ரோ 53, எம்.மொனிக் 30, எஸ்.டிலக்ஷன 25 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணிசார்பாக, எஸ்.பிரசாத் 2, என்.செந் தூரன் 2, கஜதீபன் 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன அணி, 29.4 ஓவர் களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து, 144 ஓட்டங் களைப் பெற்றது. எஸ்.பிரசாத் 26, என்.தனுஜன் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் என்.நிருசிகன் 03, எஸ்.டிலக்சன் 03, என்.ஜவன் 02 விக்கெட்டுக்களையும் கைப்பற் றினர். (க)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# அரை மரதன் ஓட்டப் போட்டி





வட மாகாண கல்வித் திணைக் களத்தால் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத் தப்பட்ட அரைமரதன் ஓட்டப்போட்டி யில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரியை சேர்ந்த பி.மாதுளன் மற்றும் பெண் கள் பிரிவில் பெண்களில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி பி.டன்சியா ஆகியோர் முதலி டத்தை பெற்றுக்கொண்டனர்.

இதில் பி.மாதுளன், ஓட்ட தூரத்தை 1 மணி 12 நிமிடங்களிலும், பெண் களில் பி.டன்சியா ஓட்டத் தூரத்தை 1 மணி 28 நிமிடம் 5 செக்கன்களி லும் ஓடி முடித்தனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பமான இந்த அரைமரதன் ஓட்டம் முல்லைத்தீவு வரை இடம் பெற்றது.

ஆண்களுக்கான அரை மர தன் போட்டியில் இரண்டாமிடத்தை துணுக்காய், கோட்டைகட்டிய குளம் அரசினர் தமிழ் கலவன் பாட சாலை மாணவன் பி.ஜனந்தன் பெற்றுக்கொண்டதுடன் மூன்றாமிடத் துக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவன் எஸ்.அபிசன் தெரிவானார்.

பெண்களுக்கான அரை மர தனில் இரண்டாமிடத்தை முல் லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியான எஸ்.டில்க் சனா பெற்றுக்கொள்ள மூன்றா மிடத்தை முல்லை, துணுக்காய் கச்சிலைமடு அரசினர் தமிழ் கல வன்பாடசாலை மாணவி எஸ்.வதுசா தனதாக்கினார்.

மேலும், ஆண்கள் பிரிவில் எஸ்.நிர்மல் (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.றேனு ஜன் (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்), ஏ.இராஜகுமார் (கிளிநொச்சி புன்னைநீராவி அர சினர் தமிழ் கலவன் பாடசாலை), ஆர்.அனுஜன் (கிளிநொச்சி உருத் திரபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.அலெக்ஸ் (துணுக்காய் கோட்டை கட்டியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), எஸ்.பவளன் (கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயம்), எஸ்.நெவின்சன் (மன்னார் முருங் கன் மகா வித்தியாலயம்) ஆகியோர் முதல் பத்து இடங்களைப் பிடித்தனர்.

அத்துடன், பெண்கள் பிரிவில், எஸ்.தமிழினி (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்), டி.மேகல பிரியா (முல்லைத்தீவு வித்தியா னந்தா கல்லூரி), வை.நிதர்சனா (முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), வி.பிரதனர் (கிளி நொச்சி மத்திய மகா வித்தியால யம்), ஆர்.சிவரஞ்சினி (யாழ். மானிப பாய் மகளிர் கல்லூரி), எஸ்.சுந் தரமதி (முல்லைத்தீவு அரசினர் தமிழ்கலவன்பாடசாலை), பி.கஜானா (முல்லைத்தீவு [illegible] வித்தியா லயம்) ஆகியோர் [illegible] இடங் களுக்கு தெரிவாகியுள்ளனர். (க)

# கவுண்டி கிரிக்கெட் போட்டியில் கெவின் பீட்டர்சன் முச்சதம்!

கவுண்டி கிரிக்கெட் போட்டியில் முச்சதம் விளாசியதன் மூலம் கெவின் பீட்டர்சனை இங்கிலாந்து டெஸ்ட் அணிக்கு அவரை மீண் டும் தேர்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 15 மாதங்களாக இங் கிலாந்து தேசிய அணிக்காக தேர்வு செய்யப்படாமல் இருக்கும் கெவின் பீட்டர்சன், தற்போது சர்ரே கவுண்டி அணிக்காக விளையாடி வருகிறார்.

லேசெஸ்டெர்ஷைர் அணிக்கு எதிரான போட்டியில் 326 ரன்கள் குவித்து அனைவரது கவனத்தை யும் ஈர்த்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடர் பற்றிய ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்ற நிலையில் இச்சாதனையை செய துள்ளார்.

இந்த முச்சதம் மூலம் இங் கிலாந்து தேசிய கிரிக்கெட் அணிக்கு திரும்ப வாய்ப்புள்ளதாக பீட்டர்சன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)

# திடீர் மாரடைப்பு காரணமாக பெல்ஜியம் கால்பந்து வீரர் மரணம்

காலபந்து போட்டியின் போது ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக, பெல்ஜியம் வீரர் டிம் நிகாட் உயி ரிழந்துள்ளார்.

பெல்ஜியம் கால்பந்து அணி யைச் சேர்ந்த 23 வயதான டிம் நிகாட் என்பவரே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 8ம் ஹெமிக்செம் என்ற இடத்தில் நடந்த உள்ளூர் போட்டி யில் வில்ரிஜ்க் அணிக்காக டிம் நிகாட் விளையாடினார்.

அப்போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக மயங்கி சரிந்தார். உடனடியாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு கோமா நிலையில் இருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பல னின்றி நேற்று உயிரிழந்துள்ள



தாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த மே 1ம் திகதியும் பெல்ஜியம் வீரர் கிரிகரி மார்டென்ஸ், 24, ஜென்க் அணிக்கு எதிராக விளையாடிய போது, மாரடைப்பு காரணமாக மரணம் அடைந்தார்.

தற்போது மீண்டும் இளம் வீரர் மரணம் அடைந்தது, பெல்ஜியம் கால்பந்து அரங்கில் அதிர்ச்சி ஏற்படுத்தியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியிடம் வீழ்ந்தது சென்னை சுப்பர் கிங்ஸ்






ஐபிஎல் சீசன் 8-ன் நேற்றைய ஆட்டத்தில் சென்னையை வீழ்த்தி டெல்லி டேர்டெவில்ஸ் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் 49-வது லீக் போட்டி சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள ராய்ப்பூர் நகரில் நேற்று இரவு 8 மணிக்கு நடைபெற்றது. இதில் சென்னை- டெல்லி அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணியின் கப்டன் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி சென்னை அணியின் ஸ்மித்-மக்கலம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

முதல் ஓவரை நதீம் வீசினார். இதில் ஸ்மித் ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை. அதனால் அந்த ஓவர் மெய்டினாக அமைந்தது. அடுத்த ஓவரை ஜாகீர்கான் வீசினார். இந்த ஓவரில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. 3-வது ஓவரில் மக்கலம் ஒரு பவுண்டரி அடித்தார். வழக்கமாக அதிரடி காட்டும் இருவரும் நேற்று ஓட்டம் அடிக்க திணறினார்கள். இதனால் ஓட்ட எண்ணிக்கை மந்தமாக சென்றது.

ஜாகீர்கான் வீசிய 4-வது ஓவரில் 3-வது பந்தில் ஸ்மித் ஒரு பவுண்டரி அடித்தார். ஸ்மித் 11 பந்துக்குப் பிறகு 12-வது பந்தில் தான் பவுண்டரி அடித்து ஓட்டம் கணக்கை தொடக்கினார். இதனால், சென்னை அணி 5 ஓவர் முடிவில் 16 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது.

6-வது ஓவரின் கடைசி பந்தில் மக்கலம் அவுட் ஆனார். அவர் 21 பந்தில் 11 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து ரெய்னா களம் இறங்கினார். 9-வது ஓவரின் முதல் பந்தில் ஸ்மித் அவுட் ஆனார். அவர் 24 பந்தில் 18 ஓட்டங்கள் எடுத்தார்.

3-வது விக்கெட்டுக்கு ரெய்னாவுடன் டு பிளசிஸ் ஜோடி சேர்ந்தார். ரெய்னா 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். 4-வது விக்கெட்டுக்கு டு பிளசிஸ் உடன் தோனி இணைய, சென்னை அணி 10.2 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது.

ஆடுகளம் பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்ததால் சென்னை அணியினரால் எதிர்பார்த்த அளவுக்கு ஓட்டம் குவிக்க இயலவில்லை. டு பிளசிஸ், தோனி ஒன்றிரண்டு ஓட்டங்களாக திரட்டினார்கள். ஆனாலும் இந்த ஜோடி நீண்ட நேரம் களத்தில் நிற்கவில்லை. டு பிளசிஸ் 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மோர்கல் பந்தில் அவுட் ஆனார். அப்போது சென்னை அணி 15.2 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 83ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அடுத்து தோனியுடன் ஜோடி சேர்ந்த பிராவோ 8 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 6-வது விக்கெட்டாக நெஹி களம் இறங்கினார். தோனி 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஜாகீர்கான் வீசிய 19-வது ஓவரின் முதல் பந்தில் ஆட்டம் இழந்தார்.

7-வது விக்கெட்டுக்கு களம் இறங்கிய ஜடேஜா நெஹியுடன் சேர்ந்து தடுமாற, சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 119 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

டெல்லி தரப்பில் ஜாகீர்கான் 4 ஓவர்கள் வீசி, 9 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார். நதீம் 4 ஓவர்களில் 18 ரன் மட்டுமே கொடுத்துள்ளார். ஜெயந்த் யாதவ் 2 ஓவர் வீசி 8 ஓட்டம் கொடுத்து ஒரு விக்கெட் எடுத்தார்.

இதனையடுத்து 120 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய டெல்லி அணி 16.4 ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. டெல்லி அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக டெல்லி அணியின் சகீர்கான் தெரிவானார். (க)







# விடுதலையான...

தெரியவருவதாவது,

கடந்த 10 ஆம் திகதி மாலை பளையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியைப் பார்ப்பதற்காக குறித்த முன்னாள் போராளி தனது உறவினருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இந்நிலையில் உதைபந்தாட்டப்போட்டி முடிவடைந்த பின்னர் பூநகரியிலுள்ள வீடு நோக்கி வந்துகொண்டிருந்த போது பூநகரி வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியால் திரும்பமுற்பட்ட வேளை எதிரே தண்ணீர்த் தாங்கியுடன் உழவு இயந்திரம் வந்துள்ளது.

இந்நிலையில் உழவு இயந்திரத்தை சாரதி சடுதியாக நிறுத்த முற்பட்டபோது தண்ணீர்த் தாங்கியின் இணைப்பு துண்டிக்கப்பட்டு உழவு இயந்திரம் தனியாக பயணித்துள்ளது. இதேவேளை வீதியில் தனித்துநின்ற தண்ணீர்த் தாங்கியுடன் மோட்டார் சைக்கிள் மோத முற்பட்டபோது மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் அதை சடுதியாக நிறுத்த முற்பட்டபோது பின்னுக்கு இருந்தவர் தூக்கி வீசப்பட்டு தண்ணீர்த் தாங்கியுடன் மோதுண்டுள்ளார்.

தண்ணீர்த் தாங்கியுடன் மோதுண்ட முன்னாள் போராளி படுகாயமடைந்த நிலை யில் சுமார் 20 நிமிடங்கள் வீதியில் கிடந்துள்ளார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு வந்தவரும் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார். இதன் பின்னர் இருவரும் பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின் அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டனர்.

இருப்பினும் முன்னாள் போராளியான பீரிஸ் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரவு 9 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம்பிரேம்குமார்விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை படுகாயமடைந்த நிலையில் பூநகரியைச் சேர்ந்த பெனடிக்ஜீவ ரஜனிகுமார்(வயது-32) என்பவரும் யாழ்.போதனாவைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# மீண்டும் நிலநடுக்கம்...

நேபாளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கத்துக்கு 37 பேர் பலியானதாக நேபாள உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், 1,139 பேர் காயமடைந்துள்ளனர். இந்தியாவில் பலி எண்ணிக்கை 16-ஆக அதிகரித்துள்ளது.

திபெத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேபாளத்தில் மதிய அளவில் 7.4 மற்றும் 6.2 என்ற ரிக்டர் அளவில் இரு வேறு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பின்படி முதல் நில நடுக்கம் ரிக்டரில் 7.4ஆக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதன் மையம் எவரெஸ்ட் சிகரம் அடிவார முகாமுக்கு அருகில் இருந்ததாக யு.எஸ். ஜி.எஸ். தெரிவித்துள்ளது.

நேற்று மதியம் 12.45 மணியள வில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத் தினால் பூமி 25 விநாடிகளுக்கு அலைபோல் ஆடியதாக தி இந்து ஆங்கில [illegible] நேபாளச் சிறப்புச் செய்தியாளர் தமகந்த் ஜெய்ஷி கூறியுள்ளார்.

நேபாளத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதன் தொடர்ச்சியாக, சென்னை உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

சென்னையில் வலசரவாக்கம், சாந்தோம், கோடம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன.

தலைநகர் டெல்லி, பிஹார், உத்தரப் பிரதேசம், உத்தர்காண்ட் மாநிலத்தில் 13 மாவட்டங்கள் உள்ளிட்ட வட மாநிலங்களிலும் மேற்கு வங்கத்திலும், அசாமிலும், குஜராத்திலும் நில அதிர்வு உணரப்பட்டது. ஆந்திர மாநிலத்திலும் நில அதிர்வு உணரப்பட்டது.

நில அதிர்வு ஏற்பட்டதால் டெல்லி மெட்ரோ சேவை நிறுத்தப்பட்டுள்ளது. டெல்லி தலைமைச் செயலகத்தில் இருந்து ஊழியர்கள் உடனடியாக வெளியேறினர். டெல்லியில் நில அதிர்வின் தாக்கம் குறித்து அறிக்கை அளிக்குமாறு அதிகாரிகளை முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் கேட்டுள்ளார்.

சரியாக நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12.35 மணியளவில் நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதே நேரத்தில் ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேபாளத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிக்டரில் 7.1 ஆக பதிவாகியது. இதனை இந்திய வானிலை ஆய்வு மையம் உறுதி செய்துள்ளது.

மேலும், நேபாளத் தலைநகர் காத்மண்டு அருகே நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும். அதன் தாக்கமே வடமாநிலங்களில் நில அதிர்வை ஏற்படுத்தியிருப்பதகாவும் தெரிவித்துள்ளது.

ஆனால், நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக இருந்ததாகவும். காத்மண்டுவில் இருந்து 83 கி.மீ. தூரத்தில் 18.5 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சிந்துபால் சவுக் பகுதியில் 3 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 12 பேர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட அரை மணி நேரத்தில் 6.2 ரிக்டர் அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானிலும், 6.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின், நிலநடுக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டால் மீட்பு பணிகளுக்கு தயார் நிலையில் இருக்குமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

நில அதிர்வுகளால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து தகவல் திரட்டப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த ஏப்ரல் 25-ம் திகதி நேபாளத்தில் ஏற்பட்ட 7.9 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்துக்கு சுமார் 8,000 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 3 பாடம் சித்தியா?
IELTS இல்லையா?
ஐரோப்பா செல்லவேண்டுமா?

பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய
செங்கன் விசா

பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
Call 077 36 16 798

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
(C-960)


## முதல் நாள் நினைவுகூரல்...

இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களாலும் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று காலை பத்து மணியளவில் இறுதிப் போரில் பல்லாயிரக் கணககில் கொல்லப்பட்ட இடமான முள்ளிவாய்க்கால் கப்பலடி பகுதியில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வட மாகாணசபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், ரவிகரன், பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் மேரிகமலா குணசீலன், வலி.வடக்கு பிரதேச சபை உப தலைவர் சஜீவன், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் கோ.கருணானந்தராசா, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொ.சிவஞானசுந்தரம் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு இரு பொதுச் சுடர்களை ஏற்றி நினைவுரைகளை ஆற்றி எழுச் சியுடன் நினைவு கூர்ந்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையில் எழுபது ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைப்போல் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமிழ் இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த படுகொலையை ஒரு நினைவுதினமாக மே பதினெட்டை அனுஷ்டித்து வந்த நாங்கள் மே பன்னிரண்டு முதல் மே பதினெட்டு வரையான காலப்பகுதியை தமிழ் இனப்படுகொலை வாரம் என அனுஷ்டிப்பதற்கு தீர் மானித்துள்ளோம்.

ஆகவே, இந்த படுகொலைகளை நினைவுகூரக்கூடிய விதத்திலே மக்கள் பெரிய அளவிலே துணிந்து முன்வந்து அனுஷ்டிப்பதன் ஊடாகத்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை கோரி நிற்கின்றோம் எங்களுக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை என்ற விடயத்தை, பொறுப்பு கூறலை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கு நிவாரணம், நீதி கிடைக்க வேண்டும் என்பதை உலககத்திற்கு சொல்லக்கூடிய விதத்தில் மக்கள் ஆர்ப்பரித்து பல்லாயிரக் கணக்கில் எழவேண்டும்.

குறிப்பாக முள்ளிவாய்க்காலுக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் உயிரிழந்த மக்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தியுள்ளார். அவர்கள் செய்தது போன்ற அஞ்சலியை நாமும் முள்ளிவாய்க்கால் உட்பட அனைத்து இடங்களிலும் அஞ்சலி செலுத்துவது எந்த விதத்திலும் எந்த சட்டத்தையும் மீறும் செயலாக அமையாது.

அவ்வாறு நாம் அஞ்சலி செலுத்துகின்ற போது இலங்கை அரசின் படைகள் தடுக்குமாக இருந்தால் அதனை அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் நன்றாக புரிந்து கொள்ளும்.

ஆகவே எங்களுடைய மக்கள், தமது உறவுகளை பறிகொடுத்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அனைத்து மாவட்டங்களிலும் ஒன்று கூடி உரிய இடங்களில் நடைபெறுகின்ற தமிழ் இனப்படு கொலை வார நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு தாமும் அஞ்சலிகளை செலுத்த வேண்டும் என்றார் அவர். (செ-4)

## இலங்கை...

டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலேயே இவ் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அனைத்துலக போக்கின் முன்னேற்றங்கள் எவ்வாறு காணப்பட்ட போதிலும், இலங்கையும் ரஷ்யாவும் தமது நட்புறவு மற்றும் நெருக்கத்தையும் தொடர்ந்தும் பேண வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது பாதுகாப்பு, சக்தி, வர்த்தகம், விவசாயம், கல்வி, நீதித்துறைகளில் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தும் உடன்படிக்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கையெழுத்திட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அணுமாத்திரமல்லாது இலங்கை ஆராய்ச்சியாளர்கள் மூலமாக ரஷ்யாவில் அணுசக்தி மற்றும் பௌதிகவியல் துறையில் கல்வி கற்பதற்கு புலமைப்பரிசில் வழங்கவும் ரஷ்யா முன்வந்துள்ளது.

அத்துடன், ரஷ்யா வழங்கிய கடன திட்டத்தில் இலங்கை விமானப்படைக்கான கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டதை தவிர்த்து எஞ்சியுள்ள 100 மில்லியன் டொலரையும், இலங்கை பயன்படுத்திக் கொள்ள முடியும் என ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## 65 இலங்கை அகதி...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த இவர்கள் தமது சொந்த இடங்களிலேயே குடியமர்த் தப்படவுள்ளார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்தவர்களில் இந்தியாவில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


DIPLOMA IN SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்
16.05.2015 காலை 10 மணி
(காலை 10.00 - 12.30 வரை இடம்பெறும்)

வடமாகாணத்தின் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி
(இங்கே கற்றவர்கள் எவரும் ஆங்கில மொழி கதைக்காமல் சென்றதில்லை)

E-CITY College of English
City & Guilds
இல-372, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106, 0212217898, 0773400418
(C-958)


## முள்ளிவாய்க்கால்...

டிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இதுவரை காலமும் இவ்வாறான நினைவு தினங்களை அனுஷ்டிக்க முன்னைய அரசாங்கத்தினால் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டிருந்தது.

அதிலும் பொது இடங்களில் இவ்வாறான நினைவு தினம் அனுஷ்டிக்க முற்றாக தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் ஆண்டுதோறும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிப்பதற்கு யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் தீர்மானித்திருந்தனர்.

இதன்படி நேற்று யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட கட்டிடத் தொகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஒரு இடத்தில் 2015 ஆம் ஆண்டு மே 18 என்று எழுதப்பட்டதும், இரத்தத்தினால் சுடர் ஏற்றப்படுவது போன்ற பதாகை ஒன்று வைக்கப்பட்டு, அதற்கு முன்னால் தீபங்கள் ஏற்றியும், மலர்கள் தூவியும் உயிரிழந்த உறவுகளுக்கு மாணவர்கள் தமது உணர்வுபூர்வமான அஞ்சலியினை செலுத்தியிருந்தனர். (செ-4)

## கோத்தா...

நீதிமன்றில் நடத்தப்படவுள்ளது.

ஈவா வனசுந்தர, புவனேக அலுவிஹாரே, சரத் ஆப்ரூ ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர் குழுவின முன்னிலையில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபர், அமைச்சரவை, நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு உள்ளிட்ட தரப்புக்கள் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (செ-11)

## 20-வது திரு...

கட்சித் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய தேர்தல் முறைமை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு அறிவிதுள்ளார.

குறித்த பேச்சுவார்த்தையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஆகியோருடன் உறுப்பினர்கள், கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (செ-11)

## சுகாதார அமைச்சரான என்...

வரும். அதன்போது என்னிடம் கேட்பார்கள் ரத்தின பிரிய இன்று வந்தாரகளா என்று. ஆம் என்று நான் கூறுவேன்.

ஏன் அவரை இன்று வருவதற்கு சம்மதம் தெரிவித்தீர்கள். அவர் தொழிற்சங்க தலைவர் என்பதனாலே அவரது வருகைக்கு சம்மதம் தெரிவித்தேன. அனைத்து தொழிற்சங்க தலைவர்களையும் சம்மதிக்க நான் அனுமதிக்க வேணடும் என்று கூறுவேன்.

அதன் போது அவர் அரசாங்கத்திற்கு எதிரானவர் என்று உங்களுக்கு தெரியாதா என்று கேட்பார்கள். தெரியும் என்று பதிலளித்தால்,

தெரியும் என்றால் எதற்கு சந்திப்பதற்கு சம்மதம் தெரிவித்தீர்கள் என்று கேட்பார்கள் நான் அனுமதி வழங்க வேண்டியது அவசியம் என்று கூறுவேன்.

கடந்த 05 வருடங்களும் என்னை இவ்வாறே கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆதங்கத்தை நேறறு வெளிப்படுத்தியிருந்தார். (செ-11)


யாழ். நகரில் பிரபல்யமான
கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

May பதினாறாம் திகதி காலை 9.00 மணி முதல் 16,17,18,19 ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Special Trainer Ganesh Sir
பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-
வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
(C-962)
BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 6131358



உடனடி வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனிக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆர்வமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள்/ சந்தைப்படுத்துனர்கள் தேவை.

- தகைமை O/L
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு
- பயிற்சியின் போது 15000/= பின் 35000/=
- வயதெல்லை 18 - 30

(C-961)
தொடர்புகளுக்கு :- 0773366453 0777981471


## வெடிபொருட்கள்...

மன்னார் விமான படை மற்றும் இராணுவ படையினர் வழங்கிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே இவ் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றன.

இதன்படி 29 தற்கொலை குண்டுகள், இரு 81 மில்லிமீட்டர் ரக மோட்டார் ரவைகள் மற்றும விடுதலை புலிகளின் உத்தியோகபூர்வ உடைகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)


CNR WORLD WIDE EXPRESS & TRAVELS
யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்
'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)

சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062
(C-954)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org